


ரமணோதயம்
ஏப்ரல் 2024
காலாண்டு
ஆராதனை இதழ்
விலை ₹ 20



# ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உதயம் 23 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்

ஏப்ரல் 2024

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:

ஆ. குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2024


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ஔவைக் குறள் | விளக்கம்: ராம் மோஹன் | 15 |
| 3 | என்.ஆர்.கே. (3) | வி. நிரஞ்சன் | 22 |
| 4 | நமக்குள் பகவான் | D. தியாகராஜன் | 28 |
| 5 | தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம் | சிதம்பர குற்றாலம் | 41 |
| 6 | ரமண புராணம் | ஆகுரா | 54 |
| 7 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | மொழிமாற்றம்: ராம் மோஹன் | 64 |
| 8 | ஸ்ரீரமணாஸ்ரமம் (இசைப்பாடல்) | ரமண ராஜசேகர் | 71 |
| 9 | செய்திகள் | | 73 |
| 10 | இனிவரும் திருநாட்கள் | | 80 |

# ஆசிரியர் உரை

## நின் இட்டம் என் இட்டம்

எது அருணாசலம்? இந்த அகிலத்தின் உயிர்த் துடிப்பே அருணாசலம். இதயமாம் தஹராகாசம் அருணாசலம். பகவானே தஹராகாசத்தின் நிரந்தர இருப்பு ஓவியத்தின் உயிர்த் துடிப்பே அந்த ஓவியன்தான். அதன் உள்ளிருப்பவனே ஓவியன். அந்த ஓவியன் பிரக்ஞை உணர்வில் முகிழ்த்ததே ஓவியம்.

பகவானது ஆரம்ப காலங்களில் அவர் அருணாசலத்தில் ஒன்றாகி ஒடுங்கும் ஆர்வத் துடிப்பைக் காட்டுகிறது. இந்தப் பேரார்வம் அவரது மழலைப் பருவம் முதலே இருந்து வந்தது. பகவானே இதைப்பற்றிப் பாடுகிறார்:

*அறிவறு கிரியென வமர்தரு மம்மா*
*வதிசய மிதன்செய லறிவரி தார்க்கு*
*மறிவறு சிறுவய ததுமுத லருணா*
*சலமிகப் பெரிதென வறிவினி லங்க*
*வறிகில னதன்பொரு ளதுதிரு வண்ணா*
*மலையென வொருவரா லறிவுறப் பெற்று*
*மறிவினை மருளுறுத் தருகினி லீர்க்க*
*வருகுறு மமயமி தசலமாக் கண்டேன்.*

பகவான் இந்தப் பாடலில் கூறுகிறார்.

அம்மா! என்ன அதிசயம்? அறிவற்ற ஜடமான கல்மலை போல தோற்றம் அளித்து இங்கே அருணாசலம் எழுந்துள்ளது. அதேசமயம், அதிசயிக்கத் தக்கதான இதன் அருட்செயல்களை எவராலும் அறிந்து கொள்ள முடியாது. அது அசாத்யமான ஒன்றாகும். எனக்கு அறிவு இன்னும் முற்றும் மலராத பிள்ளைப் பருவம் முதல் கொண்டே அருணாசலம்

வெறும் மலையல்ல. அது அகிலத்தின் அனைத்திலும் மிகப் பெரிய விகாசமான ஒன்றாகும் என என் உள்ளுணர்வில் தோன்றிக் கொண்டே இருந்தது. அப்படித் தோன்றிய ஒன்று திருவண்ணாமலையே என்னும் அருட் தோற்றம் என ஒருவரால் அறிவிக்கப் பட்டேன். எனினும், அதனுடைய மெய்ப் பொருளை நான் உள்ளபடி அறியவில்லை. அருணாசலமே என் அறிவை மயக்குவித்து என்னைத் தன்னிடத்தில் கவர்ந்து கொண்டது. அருகில் வந்து பார்த்ததும், அதுவே ஜடப் பொருளான மலைபோல் காட்சி அளித்தது. எவராலும் உண்மையில் அறிய இயலாத இந்த அரிய பொருளாம் அருணாசலத்தை இவ்வாறு கண்டு நான் பிரமித்து அசலமாய் நின்றேன் என்கிறார் பகவான்.

திருஞானசம்பந்தர் தனது பதிகத்தில் சிவபெருமான் கயிலையில் அணுக்கமாய் அவரருகில் இருந்த தன்னை எங்ஙனம் மயக்குவித்து பூவுலகிற்கு இழுத்து வந்தார் என்று கூறுவது போலவே இப்பாடலும் அமைந்துள்ளது.

இந்த ஒரே பாடலில் பகவான் தன் இளமைப் பருவத்தில் தனக்குண்டான அருணாசல ஸ்மரணத் தையும், அதனால் தனக்கு ஏற்பட்ட மனநிலையையும், தான் அருணாசலத்தால் ஈர்க்கப்பட்டபோது தன்னிலையின் மயக்க நிலையையும் அதேசமயம் அதனை ஜடமான மலையாய்க் கண்ணுற்றபோது எழுந்த ஆச்சரியத்தையும் அழகுறக் காட்டுகிறார்.

பகவானுக்கு அருணாசலத்திடம் ஏற்பட்ட ஈர்ப்போ ஆஸ்போர்ன், முருகனார் போன்ற ஆயிரக்கணக்கான அடியார்க்கு பகவானிடம் ஏற்பட்ட ஈர்ப்போ, மதுரகவியார்க்கு நம்மாழ்வாரிடம் ஏற்பட்ட பிணைப்போ, யாழ்ப்பாணர்க்கு ஞானசம்பந்தரிடம் ஏற்பட்ட ஈர்ப்போ எங்ஙனம் வந்தது? சங்கரர் சிவானந்த லஹரியில் கூறும் உவமை நினைவுக்கு வருகிறது.

*அங்கோலம் நிஜ பீஜ ஸந்ததிரயஸ்காந்தோபலம் ஸூசிகா*

ஏறழிஞ்சல் மரத்தின் விதைகள் பழுத்துக் கீழே விழுந்தவுடன் தானாகவே மீண்டும் மரத்தில் ஏறிச் சென்று தன் தாய் மரத்துடன் ஒட்டிக் கொள்வதுபோலவும், இரும்பு காந்தத்துடன் தானாகவே சென்று ஒட்டுதல் போலவும் இறைவனிடம் ஜீவன் தானாகவே சென்று ஒட்டுகிறது என்று உவமிக்கிறார்.

இந்த இயற்கையான வெளிமுயற்சி ஏதும் இல்லாத பகவான் அருணாசலப் பிணைப்பை நம்மால் விளக்க இயலாது.

*யதா[2] நத்[3]ய: ஸ்யந்த[3]மாநா:*

என்பது இதனைச் சுட்டும் மற்றொரு உவமை.

எந்த வழியாக நான் ஓடினாலும் இறுதியில் நான் என் சொந்த இல்லமான சமுத்திரத்தை அடைந்து விடுவேன் என்பதை நான் அறிவேன் என்ற ஸ்லோகமும் இதையே கூறுகிறது. சிறுவனான பகவான் வாழ்விலும் அதுதான் நிகழ்ந்தது. உண்மையில் பூர்ண ஸ்வரூபமான அருணாசலம் பூர்ண ஸ்வரூபமான பகவானைத் தன்னுடன் ஒன்றுமாறு அழைத்தது. இந்த வ்யக்திகளில் முதலாவது அருணகிரி அசைவற்றது (ஸ்தாணு); அதேசமயம் அடையக் கூடியது.

ஸ்திர பக்தியோக ஸுலப: என்று ஸம்ஸ்கிருதத்தில் கூறுவதுபோல் இடைவிடா பக்தி, யோகத்தினால் அடையக் கூடியது அதை நாடி வருகின்ற இரண்டாவது வ்யக்தியான பகவான் என்றும் அசையக் கூடிய ஒன்று. அதேசமயம் தான் தனது தந்தை அல்லது இல்லத்திற்கு வர அழைக்கப்பட்டுள்ளது என்று மேலோங்கும் உணர்வு எழுச்சியால் தூண்டப்பட்டுள்ளது. உலகாயத இருளில் இருந்து வெளி இழுக்கப்பட்ட அந்த வ்யக்தியின் ப்ரக்ஞை இந்த இறைப் பெருங்கருணையின் ஆற்றலை உணரத் துவங்கியது.

கவிஞர் வோர்ட்ஸ்வொர்த் தனது *Ode to Immortality* என்ற பிரசித்தி பெற்ற ஆன்மிகக் கவியில் இங்ஙனம் கூறுகிறார்.

*Our birth is but a sleep and a forgetting:*
*The Soul that rises with us, our life's Star,*
*Hath had elsewhere its setting,*
*And cometh from afar:*
*Not in entire forgetfulness,*
*And not in utter nakedness,*
*But trailing clouds of glory do we come*
*From God, who is our home*

அருணாசலம் மிகப் 'பெரிது' என்ற வரிகள் ஒரு பௌதிக நிலையைக் குறிப்பதல்ல அது. அருணாசலமாய் வடிவு எடுத்து வந்துள்ள ஈஸ்வரனின் அளவற்ற மஹிமையைக் குறிப்பதாகும். இந்த அருணாசலத்தை தன் இஷ்ட தெய்வமாய்க் கொண்ட பின் "அப்பாவுக்குப் பிள்ளை அடக்கம்" என்று அருணாசலத்திலேயே ஒடுங்கி விடுகிறார்.

பகவானிடம் பக்தர் ஒருவரின் துணிவான வினா:

பகவான்! எனக்கு நேரடியான மீவியற்பியல் அல்லாத (metaphysical) விடை தேவை. உறுதியான ஆதாரத்துடன் விடை கூறுங்கள். கடவுள் உண்மையில் இருக்கிறாரா? இருந்தால் அவரை எனக்குக் காண்பிக்க முடியுமா?

பகவான் ஓர் அழகிய புன்னகையை உதிர்த்துவிட்டு, "இதை நீ என்னவென்று நினைக்கிறாய்?" என்று வினவி அருணாசலத்தை நோக்கித் தன் விரல்களைச் சுட்டினார். பின்னர் விடையிறுத்தார். "ஈஸ்வரன், குரு, ஆத்மா அனைத்துமே ஒரே பரம்பொருளின் வெவ்வேறு வெளிப்பாடுகளே."

"ஈய்வரோ குருராத்மேதி மூர்த்தி பேத விபாகிநே", பகவானைப் பொறுத்தவரை குரு, ஆத்மா, கடவுள்

இந்த மூன்றுமே அருணாசலம்தான். அதைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. அதேபோன்று அவரது உபதேசம் தக்ஷிணாமூர்த்தியைப்போல் மௌன உபதேசம். பகவான் மௌன உபதேசத்தினையே பெரும்பாலும் கடைப்பிடித்தார்.

குருவைப் பற்றிய பகவானின் கருத்து, அவர் திலீப் குமார் ராயுடன் நிகழ்த்திய இந்த உரையாடலில் வெளிப் படுகிறது.

திலீப்: எல்லோரும் குருவின் வழி காட்டுதல் அவசியமென்று சொல்கையில் குரு அவசியமில்லை என்று பகவான் சொல்வதாகத் தெரிகிறதே?

பகவான்: குரு அவசியமில்லை என்று நான் ஒருபோதும் சொன்னதேயில்லை.

திலீப்: தங்களுக்குக் குரு யாரும் இருந்ததில்லை என்று ஸ்ரீ அரவிந்தர் அடிக்கடி குறிப்பிடுகிறார்.

பகவான்: குரு என்பவர் யார் என்பதைப் பொறுத்தது அது. குரு என்றால் மனித வடிவில்தான் இருக்க வேண்டும் என்று இல்லை. தத்தாத்ரேயருடைய இருபத்து நான்கு குருமார்களில் இயற்கைத் தத்துவங்கள் உள்பட பலர் அவரது ஞானாசிரியர்களாம். அதன் உட்பொருள், உலகத்தில் காணப் பெறும் எந்த உருவப் படிமமும் அவருக்குக் குருவாக அமைந்தது. மன விகாரங்களாகிய இருண்ட வனாந்தரத்தில் இருந்து மனிதனை விடுவிக்க குரு ஒருவரால் மட்டுமே சாத்யமாகும் என்று உபநிஷத்துகள் உணர்த்துகின்றன. எனவே குரு இருக்கத்தான் வேண்டும்.

திலீப்: நான் சொல்வது மனித வடிவமான குருவைப் பற்றி. மஹரிஷியும் தங்கட்கு அவ்வாறு ஒரு குரு இருந்தாரில்லை.

பகவான்: ஏன்? எப்பொழுதாவது ஒரு சமயம் எனக்கு ஒரு குரு இருந்திருக்கலாம். அருணாசலத்தைக் குறித்த

பாடல்கள் பாடி உள்ளேன். குரு என்றால் என்ன? அருணாசலத்தைக் குறித்து அல்லது ஆத்மாவே குரு. மனிதன் தன் விருப்பங்கள் நிறைவேற கடவுளை வேண்டுகிறான். அப்புறம் ஓர் நினைவு எழுகிறது. ஆசை நிறைவேறுவதற்கான வழிபாடு நின்றுபோய் ஆண்டவனையே தியானிக்கிறான். அப்போது கடவுள் அவன்முன் ஏதோ உருவில் காட்சி அளிக்கிறார். மனிதன் உருவத்திலோ அல்லது வேறு வடிவமாகவோ தோன்றி, அவன் பிரார்த்தனையைக் கண்டு தானே குருவாய், வழி காட்டுகிறார்.

ஆர்தர் ஆஸ்போர்ன் இதுபற்றி வினவுகையில், “குரு மனித வடிவில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை” என்று பகவான் விளக்கினார். வழக்கத்திற்கு மாறாக பகவான் அபூர்வமாக அளித்த விளக்கம் இது என அறிய வேண்டும்.

வி.வேங்கடராமன் என்ற பக்தருடன் உரையாடும் போது, பகவான், தாம் ஒரு குரு என்பதைச் சற்று வெளிப்படையாகவே காட்டினார். பகவான் கூறியதாவது, “இரண்டு காரியங்கள் செய்ய வேண்டும். முதலில் உன்னை விடுத்து வேறு ஒருவரை குருவாக ஏற்க வேண்டும். அதன்பின் உன்னுள் ஒளிரும் குருவைத் தேட வேண்டும்.”

கபீர் தாஸரின் பாடல் ஒன்றை இங்கே நினைவு கூறலாம்.

ஜப் அமை தாந்தப் குரு நாஹி
அப் குரு ஹை ஹம் நாஹி
ப்ரேம் கபி அதி ஸங்கடி
தா மே தோ ந ஸமயே

பொருள்: எதுவரை ‘நான்’ என்பது இருக்கின்றதோ அதுவரை குரு இல்லை. (அதாவது என்னுள் ப்ரஸன்னமாய் இல்லை) குரு என்னுள் இருக்கும் இப்போது, ‘நான்’ இல்லை.

பேரன்பின் பாதை மிகவும் குறுகலானது. இதில் இருவர் ஒரே சமயத்தில் இருப்பது சாத்யமில்லை. இந்தக் கபீர் பாடல் குரு தத்துவத்தினையும் அத்வைதத்தையும் ஒருங்கே இணைக்கிறது.

பகவான் நிறைய அன்பர்களுக்கு நயன தீக்ஷையையும் வழங்கி உள்ளார். அத்தகைய நயன தீக்ஷயால் பெறப்படும் பகவான் எப்படிப்பட்டவர்? பகவானே இதை மிக அழகாக சுருக்கமாக பொருள் பொதிந்த வாக்கியத்தில் விளக்குகிறார்.

“ரமணனை ஏன் இந்த எண்சாண் உடம்பினில் அடைக்க வேண்டும்?”

“ரமணன் எங்கும் வியாபித்தவன்”

ஒரு பிறவி ஞானிக்கும் மற்றைய மனிதர்கட்கும் என்ன வேறுபாடு? கண்ணன் கீதையில் கூறுகிறான் (2.69)

*யா நிஷா ஸர்வபூதானாம் தஸ்யாம் ஜாகர்தி சன்யமி ।*
*யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ச நிஷா பஷ்யதோ முனே: ॥ 69॥*

இதற்குப் பொருள் கூறுகையில், பாஷ்யகாரர், ஞானி மற்றவர் எவரும் செய்ய அஞ்சும் அல்லது தயங்கும் செயல்களை, நான் செய்கிறேன் என்ற கர்த்ருத்வ பாவம் இன்றி, பயமும் இன்றி செய்கிறான் என்று விவரிக்கிறார்.

பசி, தாகம், உடல் தேடும் ஸௌக்யம், தூக்கம் அனைத்தையும் மறந்து, இளம் பாலகனாய் பாதள லிங்க குகையில் தன்னில் ஆழ்ந்து அமர்ந்திருந்தார் பகவான். மற்றவர்கட்கு அசாதாரணமான இந்தச் செயலைச் செய்தவர் பகவான். அருணாசலத்தை அடைந்தவுடன் தன்னை இழந்து

“என் புகலிடம், நின் இட்டம், என் இட்டம்
இன்பெதற்கு என்னுயிர் இறைவே”

“உன் விருப்பம் எதுவோ அதுவே எனது விருப்பம் அதுவே எனக்கு இன்பமும் ஆகும்” என்று பூர்ண ப்ரபத்தி நிலையில் பாடினார் பகவான். பாரத நாட்டு ஞானி - பக்தர்களின் பல்வேறு பாடல்களில் இப்பூர்ண சரணாகதி உணர்வு வெளிப்படுகிறது. 12 வயது சிறுவனான ஸ்வாமி நாராயண், அயோத்தி புனித நகரில் நள்ளிரவில் “இறைவனே, ‘நான் செய்கிறேன்’ என்று கர்த்துத்வ அகந்தையுடன் செய்வது ஒன்றுமே இல்லை. அனைத்தையும் விடுத்து, ‘நின் இட்டம், என் இட்டம்’ சொல்வதற்கோ, செய்வதற்கோ ஒன்றுமே என்னிடம் இல்லை” என்று தன் சுய முயற்சி அனைத்தையும் விடுத்து, கைகால்களைக் கட்டிக் கொண்டு ஸரயு நதியில் பாய்கிறான். உயிர் பிழைக்க எந்த முயற்சியும் செய்யவில்லை. ஸரயு நதியே சிறுவனைக் கொண்டு போய் ஹரித்வார் கங்கை தீரத்தில் சேர்க்கிறது. இரவில் மரத்தடியில் அமர்ந்திருக்கும் சிறுவனைக் கண்டு, சிங்கமும் பணிகிறது. பகவானும் இந்நிலையை இந்தப் பாடலில் விளக்கி உள்ளார்.

ரிச்சர்ட் பாக் என்ற பிரசித்தி பெற்ற எழுத்தாளர் இதை ஓர் உருவகக் கதையின் மூலம் விளக்குகிறார்.

“ஒரு காலத்தில் ஒரு தெளிந்த நதியின் அடித்தளத்தில் பல ஜந்துக்கள் கூட்டமாய் வாழ்ந்து வந்தன. இந்த ஜீவராசிகள் அனைத்தும் வேறுபாடின்றி அணைத்துக் கொண்டு ஆற்றுநீர் ஓடிக் கொண்டு இருந்தது. வேகமாகச் செல்லும் ஆறு தங்களை அடித்துச் சென்று விடும் என்று பயந்த ஜந்துக்கள் ஒவ்வொன்றும் ஆற்றின் அடித்தளத்தில் ஒரு பாறையையோ, கட்டையையோ கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இருந்தன. அப்படியாக கிடைத்ததைப் பற்றிக் கொண்டு தொங்கிக் கொண்டு இருப்பதுதான் வாழ்க்கை என்று எண்ணிக் கொண்டு இருந்தன. ஓடும் நீரை எதிர்த்து வாழ்வதுதான் அவை கற்றுக் கொண்ட வாழ்க்கை லட்சியம்.

“நெடுங்காலம் பல தலைமுறைகளாக இந்த ஜந்துக்கள் வாழ்ந்து கொண்டு இருந்தன. அவற்றின் இளையதான ஒன்று சிந்திக்கத் தொடங்கியது. ‘இப்படிக் கல்லிலும், குச்சியிலும் ஒட்டிக் கொண்டு அவற்றையே சார்ந்து வாழ்வது அலுப்பைத் தருகிறது. இந்த நதியை நோக்கும்போது, நாம் எங்கே போக வேண்டுமோ அங்கேதான் இந்த நதியும் போகிறது என நம்புகிறேன். நான் கல்லையும் குச்சியையும் சார்ந்து வாழும் இந்த வாழ்வினை விட்டு விடுகிறேன். இந்த நதிப் பிரவாகம் என்னை எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லட்டும்’ என்று பாறையிலிருந்து தன் பிடியை விடுகிறது.

“மற்ற ஜந்துக்கள் தள்ளி நின்று ‘அட முட்டாளே பிடித்த பிடியை விட்டாயா? பெரும் பாறைகளில் ஆற்று வேகத்தால் மோதப்பட்டு சிதறிப் போவாய்’ என எச்சரித்தன. அந்த ஜந்து மற்றவற்றின் அறிவுரைகளைக் கேட்டவில்லை. பிடியை விட்டு விட்டபின், வேகமான ஆற்றுப் போக்கில் பாறைகளின்மீது வீசப்பட்டது. எப்படி வீசப்பட்டாலும் அது மீண்டும் பாறைகளைப் பற்றிக் கொள்ள மறுத்து ஆற்றோட்டத்தின் போக்கிலேயே தன்னை முற்றிலுமாய் விட்டுவிட்டது. சிறிது நேரத்தில் அந்த நீரோட்டம் அந்த ஜந்துவை தூக்கி மேலே, மேலே கொண்டுபோய் நீரின் மேற் பரப்புக்கு வந்த ஜந்து தன்னைச் சுற்றிலும் இதுவரை கண்டிராத அதிசயக் காட்சிகளைக் கண்டது. தன்னைச் சுற்றிலும் அழகான தாவரங்கள், விலங்குகள், பறவைகள் என அனைத்தும் மகிழ்ச்சியில் திளைப்பதைக் கண்டு தானும் மகிழ்ந்தது.

“நீர்ப்பரப்பில் அது மிதந்து செல்லும் பாதையில் ஆற்றின் ஆழத்தில் பாறைகளைப் பற்றிக் கொண்டு இருந்த ஜந்துக்கள், ‘அற்புதம்! அற்புதம்! வானவெளியில் மிதந்து செல்லும் இந்த தேவன்

நம்மைக் காக்க வந்தவன்' என்று ஆர்ப்பரித்தன. நீரில் மிதந்து சென்று கொண்டிருந்த ஜந்து கூறியது, 'நான் தேவன் அல்ல. நானும் உங்களைப் போன்றவன்தான். என்போன்று எல்லோரும் நம்மை உலகில் அச்சம், ஆசை வாயிலாகப் பிணைக்கும் பந்தங்களை அறுத்து விட்டால் இந்த மஹாநதிப் பிரவாகம், நம்மை முக்தி நிலைக்கு உயர்த்துவதை தானாகவே மகிழ்ச்சியுடன் செய்கிறது. அதுதான் நம் வாழ்வின் குறிக்கோள்' என்று கூறியது.

"ஆனால் பாறைகளை இன்னும் பற்றிக் கொண்டு இருந்த ஜந்துக்கள் அதன் பேச்சைக் கேட்கவில்லை. 'எமது ரக்ஷகனே' என்று கூச்சல் போட்டன. ஆயினும் கற்பாறைகளைப் பற்றிக்கொண்டு இருந்து தம் பிடியைச் சிறிதும் விடவில்லை. அங்கேயே முன்போல் பாறைகளையே பிடித்துக்கொண்டு நீரின் அடிவாரத்திலேயே வாழ்ந்து மறைந்தன."

இந்த உருவகக் கதையில் கூறப்படும் நதிதான் பகவானின் அருட் பிரவாஹம். அந்த அருணாசலமே, உலகப் பற்றுக்களையும், சார்பையும் விட்டுத் தன்னையே சார்வோரை முக்தி நிலைக்கு உயர்த்துகிறது. அங்ஙனம் உயர்நிலைக்கு உயர்ந்த ஜந்துதான் பக்தனும், ஞானியும்.

இந்தக் கதையில் வரும் ஜந்துபோல் பகவானிடம் "என் புகலிட, என் உயிர் இறையே, நின் இட்டம் என் இட்டம் அது எற்கு இன்பு" என்று மஹரிஷி அறிவுறுத்துவது இந்தப் பூர்ண சரணாகதி வழி.

காட்டினல் நியூமேன் என்ற ஆங்கில இறையியலாளர் பாடலில் இறைஞ்சுகிறார். "இறைவனே! நான் ஒரு மூடன் நீ என்னை உன்னுடன் அழைத்துச் செல் என நான் இறைஞ்சியதில்லை. எந்தவிதமான பணிவும், பக்தியும் இல்லாமல் என் வழியிலேயே சென்று கொண்டு இருக்கிறேன். என் செயல் எவ்வாறு தவறாய்

இருப்பினும் நீ அருள் கூர்ந்து சரியான வழியை எனக்குக் காட்டுவாய். நான் உலகப் பகட்டிலேயே ஆழ்ந்து அஹங்காரத்தால் தறிகெட்டு அலைந்தேன். அதையெல்லாம் கருத்தில் கொளாது, அருட் சுடரே, எனக்கு வழிகாட்டுவாய்?" ("Lead, Kindly Light" Cardinal Newman) என்று மனமுருகப் பிரார்த்திக்கிறார்.

நம்மில் பெரும்பாலோர் அப்படித்தான் அத்வைதத்தைப் பற்றி பல நூல்களைப் படித்த பின்பும் பல சொற்பொழிவுகளைக் கேட்ட பின்பும், பல ஞானியர்களைக் கண்ட பின்னரும், நம் பாவம் நம்மை விட்டு நீங்குவதில்லை.

அத்வைத அநுபூதி என்பது ஜீவப்ரஹ்ம ஒருமைப்பாடு. அது கற்பனைப் புதிர் அல்ல. அது உறுதிப்பாடு. பகவான் புத்தரிடம் ஒரு சாதகர், "I want bliss" என்று கேட்டபோது புத்தர், "உனது கேள்வியில் இருக்கும் I - நான், என்பதையும், want - விரும்புகிறேன், என்பதையும் விட்டு விட்டால் (bliss) பேரானந்தம் உடனே பெறுவாய்" என்கிறார்.

"நான் எங்ஙனம் இறை அநுபூதியைப் பெறுவது?" என்ற கேள்வி ஒரு தவறான கேள்வி. ஏனெனில் இந்தக் கேள்வியை எழுப்பும், 'நான்' என்பது தன் முனைப்பு அல்லது அகந்தையின் வெளிப்பாடே. அநுபூதி என்பது முயன்று பெறுவதல்ல. அநுபூதி என்பது நம்மை முற்றிலும் இறை உணர்வில் கரைக்கும்போது இறை அருளால் பெறுவது. அது புத்தகமும், உணர்வுக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்டது. இறை அநுபூதி ஏதோ ஒரு பொருள் முயற்சியால் அடைவது போன்று அடையும் பௌதிக வஸ்து அல்ல. இறையநுபூதி இங்கேயே, இப்பொழுதே பெற இயலும். கடோபநிஷத்தில்

**அத்ர ப்ரஹ்ம ஸமஸ்நுதே (2.3.14)**

ஆத்மா இங்கேயே இப்போதே உணரப்படுகிறது என்பது வேதம் அறுதியிட்டுக் கூறும் சத்யம்.



அநுபூதி பெற வேண்டும் என்ற முனைப்பு ஒருவருக்கு ஏற்பட்டாலே அவர் அந்த நிலையை அடையத் துவங்கி விட்டார் என்பது சத்யம். திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் கூறுகிறார்.

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலஉடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீமுன்னிய வினையே

பொருள்: முருகப் பெருமானின் சிவந்த திருவடிகளை அடைவதற்குரிய தூய உள்ளத்துடனும் பிறர்க்கு நன்மையே செய்யும் கொள்கையுடனும் இருந்தால் நீ வேறு இடத்திற்கே செல்ல வேண்டாம். உன்னுடைய ஆத்மிக சாதனையின் பயனை இங்கே, இப்போதே பெறுவாய். (திருமுருகாற்றுப்படை 62-66)

பகவானை இதயத்தின் ஆழத்தில் ஒரே நோக்குடன் எண்ணுவோம். இங்கேயே இப்பொழுதே அவர் அரவணைப்பைப் பெறலாம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹறன்

### *24. கண்ணாடி*

*குறள் 231: கண்ணாடி தன்னில் ஒளிபோல் உடம்பதனுள்
உண்ணாடி நின்ற ஒளி.*

*பொருள்:* கண்ணாடிக் குவளையில் உள்ள நீரில் வெளியே உள்ள சூரியன் தெரிவதுபோல அண்டம் முழுதும் பரவிப் படர்ந்து இருக்கும் சிவம் ஒவ்வொரு படைப்பிலும் பரவியுள்ளது.

*விளக்கம்:* இறைவனது சர்வ வியாபகத் தன்மையை இந்தக் குறள் விளக்குகிறது. ஈஶாவாஸ்ய உபநிடதத்தின் முதல் ஸ்லோகமே இதைத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

*ஈஶாவாஸ்யம் இத³ம் ஸர்வம் யத்கிஞ்ச ஜக³த்யாம் ஜக³த்*

இவ்வுலகில் உள்ள அசையும் பொருள், அசையாப் பொருள் அனைத்திலுமே இறைவன் ஊடுருவி அடிப்படைப் பொருளாய் உள்ளான் என உபநிஷத ரிஷி கூறியுள்ளதை இங்கே ஔவைப் பிராட்டியார் எடுத்து இயம்புகிறார்.

இந்த அருட்குறளின் உள்ளுரைப் பொருளை ராஜயோக மார்க்க வழியிலும் பொருள் கொள்ளப் படுகிறது. “உடலின் மூலாதாரத்தில் மறைந்திருக்கும் குண்டலினி சக்தியானது சூரிய ஒளியில் வைத்த

கண்ணாடியுள் தெரியும் சூரிய பிம்பம் போல் ஒளிர்ந்து தோன்றும்" என்று பொருள் கூறுகிறார் யோகாசிரியர்.

*குறள் 232: அஞ்சு புலனின் வழியறிந்தாற் பின்னைத்*
*துஞ்சுவது இல்லை உடம்பு.*

*பொருள்:* ஐம்புலன்கள் எப்படி நம்மை உலகப் பொருள்களின் மீது கருத்தைச் செலுத்தி உலக மாயையில் சிக்க வைக்கின்றன என்பதை அறிந்து, இது மாயை என்று உணர்ந்து, தெளிந்த மனமானது, வெளியுலக நாட்டத்தில் இருந்து விலகி, புலன் அடக்கத்துடன் இதயத்தில் ஒடுங்கி எதற்கும் அஞ்சாது சிவனில் மனத்தை உறுதியாக வைத்து, இறையில் ஒடுங்கும் நோக்கத்திலேயே ஈடுபட்டு இருக்கும்.

*விளக்கம்:* ஐம்புலனின் சக்திகளை உலக வஸ்துக்களைப் பெறுவதில் செலுத்தாமல் பரம்பொருளில் ஒடுங்கும் வழியை அறிந்து அதிலேயே ஈடுபட்டால், உடல் அழிவதில்லை என்பது மற்றொரு பொருள்.

திருமந்திரப் பாடல் இதனையே விளக்கிக் கூறுகிறது:

*பாய்ந்தன பூதங்கள் ஐந்தும் படரொளி*
*சார்ந்திடு ஞானத் தறியினில் பூட்டிட்டு*
*வாய்ந்துகொள் ஆனந்தம் என்னும் அருள்செய்யில்*
*வேய்ந்துகொள் மேலை விதியது தானே.*

(திருமந்திரம், 2038)

ஐம்புலன்களை புறப்பொருள்களின் கவர்ச்சி நாடி வெளியே பாயும் தன்மையுடன் பிரம்மன் படைத்துள்ளான்.

*பராஞ்சி கா²னி வ்யத்ருணத் ஸ்வயம்பூ⁴*

(கடோ²பநிஷத், II-1)

அங்ஙனம் அவை பாய்வதை ஸத்குருவின் உபதேசத்தின் துணைகொண்டு தடுத்து, 'நமசிவாய' என்னும் உயர் மந்திரத்தின் துணைகொண்டு இறைவன் மீது கொண்ட தீவிர பக்தியால் திருவடியில் கட்டிப்

பூட்டுக. அங்ஙனம் செய்வோர்க்கு இறைவன் தன்னில் கரையும் பேரின்பத்தை அருளுவான்.

மற்றும் ஒரு திருமந்திரப் பாடலும் இக்கருத்தினை விளக்குகிறது:

கிடக்கும் உடலில் கிளர்இந் திரியம்
அடக்கல் உறும்அவன் தானே அமரன்
விடக்கிரண்டு இன்புற மேவுறு சிந்தை
நடக்கின் நடக்கும் நடக்கும் அளவே.

(திருமந்திரம், 2032)

"அனைத்து உயிரும் உய்யும் வண்ணம் சிவனால் தரப்பட்ட உடலில் உள்ள பொறிகள் (இந்திரியங்கள்) துணையாகவே அமைக்கப் பட்டுள்ளன. கரும வினைத் தொடர்பால் அவை தீய வழிகளில் செல்கின்றன. அவ்வழியில் உயிராகிய நாமும் செல்லாது நலச் சார்பால் சிவனிடம் முற்றுமாகச் சரணடைந்து விடவேண்டும். புலன் செல்வதற்கு இங்கு சற்றும் இடமே இல்லை. இதுவே உண்மையான புலனடக்கம்."

குறள் 233: நாபி அகத்தே நலனுற நோக்கிடில்
சாவதும் இல்லை உடம்பு.

பொருள்: (தொப்புள் எனப்படும்) நாபிக் கமலத்தில் எண்ணங்கள் அனைத்தையும் விடுத்து அசைவின்றி ஒன்றி இருக்க, மரணமில்லாப் பெருவாழ்வை எய்தலாம்.

இதே கருத்தை, திருமந்திரம் தெளிவாக விளக்குகிறது:

உந்திக் கமலத்து உதித்தெழும் சோதியை
அந்திக்கு மந்திரம் ஆரும் அறிகிலார்
அந்திக்கு மந்திரம் ஆரும் அறிந்தபின்
தந்தைக்கு முன்னே மகன்பிறந் தானே.

(திருமந்திரம், 869)

“நம் உடலில் உள்ள ஆறு யோக சக்கரங்களில் மணிபூரகம் எனும் தொப்புள் களத்தில் தோன்றி யோக சாதனையால் சுடர்விட்டு ஒளிரும் ஞான ஜ்வாலையில் மனத்தை ஒருமனப்படுத்தி தியானம் செய்யும் முறையை ஒருசிலரே அறிவர். அதை அறிந்து, ‘சிவாய நம’ என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தில் ‘சி’ என்னும் நான்காம் எழுத்திற்குமுன் ‘ய’ என்னும் மூன்றாம் எழுத்து வருதலை தந்தைக்கு முன்னே மகன் தோன்றினான்” என்று சூட்சும மந்திரங்களை உச்சரிக்கும் முறையைத் திருமூலர் கூறுகிறார்.

*குறள் 234: கண்டத்து அளவில் கடிய ஒளிகாணில்*
*அண்டத்தர் ஆகும் உடம்பு.*

பொருள்: *(இந்தக் குறளும் யோக சக்ரத் தியான முறையைப் பற்றிக் கூறுகிறது).*

*தியானத்தின்போது யோகப் பயிற்சியின் உயர்நிலையில் கழுத்துப் பகுதியில் விசுத்தி சக்கரத்தில் ஒளி தோன்றும். அப்போது உடல் மரணமில்லாப் பெருவாழ்வு எய்தலாம் என்கிறார் ஔவைப் பிராட்டி.*

*குறள் 235: சந்திரன் உள்ளே தழலுற நோக்கினால்*
*அந்தரம் ஆகும் உடம்பு.*

பொருள்: *(இதுவும் ராஜயோக அப்யாஸமாகும்)*

*இடது திருவடி ஆகிய சந்திரனில் உள்ளே அக்கினிக் கனலை எழுப்பிப் பொருந்தும்படி செலுத்த, தூல*

**ரமணோதயம்**
**Voluntary Services**

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770
ராஜேஷ் M.S. 9840075778

உடலானது சக்தி நடுவில் ஓடி ஆகாயத்தைப் போல் தூய்மையாகி, மறுபுறத்துப் பரந்து இருக்கும்.

விளக்கம்: சந்திர கலையில் தலையின் உச்சிப் பகுதியில் யோகப் பயிற்சியின்மூலம் செஞ்சுடர் தோன்றினால் உடல் முற்றிலும் லேசாகி, ஆகாயத்தில் மிதப்பதுபோல் இருக்கும். பல யோகிகள் அந்தரத்தில் பறப்பது இக்கலையின் பயிற்சியினாலேயே.

குறள் 236: ஆர்க்குந் தெரியா உருவம்தனை நோக்கில்
பார்க்கும் பரமாம் அவன்.

பொருள்: எவராலும் ஊனக் கண்ணால் காண இயலாத பேரொளியே அந்தச் சிவன் (ஞான, யோகப் பயிற்சியின் மூலமும், இடைவிடாது ஆத்ம விசாரணை மூலமே அவனை இதயத்தில் காணமுடியும்). அவனைத் தன்னுள்யே கண்ட மாத்திரத்தில், அவனே எங்கும் வியாபித்து இருக்கும் பரம்பொருள் என்பதை உணர முடியும்.

விளக்கம்: இதே கருத்தை பகவான்,

வெளிவளி தீநீர் மண்பல உயிராய்
விரிவுறு பூதபௌ திகங்கள்
வெளியொளி உன்னை அன்றியின் றென்னின்
வேறுயான் ஆருளன் விமலா

(அருணாசல பதிகம், 7)

என்று விளக்குகிறார். “எங்கும் வியாபித்து நிறைந்திருக்கும் ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் என்னும் பஞ்சபூதங்களும் அவற்றின் கலப்பில் தோன்றிய பல்வேறு பௌதிகப் பொருட்களும், ஜீவராசிகளும், சிதாகாச ரூபத்தின் வெளிப்பாடாய்த் தோன்றிய உன்னையன்றி வேறு ஒன்றுமே இல்லை. நான் ஒருவன் மட்டும் உனக்கு அந்நியமாக எப்படி இருக்க முடியும்?” என்று அருணாசல பதிகத்தில் பகவான் விடுக்கும் வினா, ஔவையாரின் இந்தக் கருத்தைப் பிரதிபலிக்கிறது அல்லவா!

குறள் 237: வண்ணம் இல்லாத வடிவை அறிந்தபின்
விண்ணவர் ஆகும் உடம்பு.

பொருள்: வண்ணமற்ற, உருவமற்ற ஓங்காரமாகிய ஆதி உருவைத் தன்னுள்ளே அறிந்து உணரும்போது மனித உடலானது தெய்வங்களின் உடல் போன்று ஒளிவீசும்.

குறள் 238: நெற்றிக்கு நேரே நிறைந்த ஒளிகாணில்
முற்றும் அழியாது உடம்பு.

பொருள்: நெற்றிக்கு நேரே புருவ மத்யத்தில் உள்ள ஆக்ஞா சக்ரத்தின் செஞ்சுடர் தோன்றினால், மரணமில்லாப் பெருவாழ்வை எய்துவான்.

குறள் 239: மாதூ வெளியின் மனம்ஒன்ற வைத்தபின்
போதகம் ஆகும் உடம்பு.

பொருள்: (மா=மிகப்பெரிய; தூவெளி=சிதாகாசப் பெருவெளி)

'மஹத்'-மூலப் பிரகிருதியில் இருந்து முதன்முதலில் முளைத்தெழுந்த தத்துவம். தோன்றப்போகும் ஜகத் முழுதும் இதில் அடங்கி உள்ளது.

மஹத்தின் பரிசுத்தப் பெருவெளியில், சுஷுப்தி, ஜாக்ரத், ஸ்வப்னம், துர்யம் என்னும் நான்கு நிலைகளையும் கடந்து அசைவற்ற நிலையில், மனத்தை ஒருமுகப்படுத்தி தியானம் செய்துவர ஆன்மா ஆதி பரத்துடன் கலந்து மரணமில்லாப் பெருவாழ்வு கிட்டும்.

குறள் 240: சுத்தமோடு ஒன்றி மனமும் இறந்தக்கால்
முற்றும் அழியாது உடம்பு.

பொருள்: பரிசுத்தமான இறைவனோடு மனம் ஒன்றி மனம் அழிந்த நிலை உருவாகும்போது, பிறவித்தளை நீங்கி மரணமில்லாப் பெருவாழ்வு எய்துவோம்.

மேற்கண்ட பத்துக் குறள்களும் மரணமில்லாப் பெருவாழ்வை ராஜயோகம் மூலம் அடையும் வழியைக் காட்டுகின்றன. இவற்றின் சுவைப்பிழிவை திருமந்திரத்தின் 881-ஆவது பாடல் தருகின்றது.

*அமுதப் புனல் வரும் ஆற்றங் கரைமேல்*
*குமிழிக் குள்சுடர் ஐந்தையும் கூட்டிச்*
*சமையத் தண்டு ஓட்டித் தரிக்க வல்லார்க்கு*
*நமன் இல்லை, நற்கலை, நாள் இல்லை தானே.*

சந்திர கலையின் ஒளிவெள்ளம் தொண்டையில் இடம் பெற்றுள்ள விசுத்தி சக்ரத்தில் இருந்து பாய்ந்து விளங்கும் ஸஹஸ்ர தளத்தில் உச்சியில் உள்ள ஆயிரம் இதழ் யோகத் தாமரை, குமிழி போல் உயர்ந்து நிற்கின்றது. இதில் சிவம், சக்தி, நாதம், பிந்து, ஜீவன் என்னும் ஐந்தையும் ஒன்றுபடுத்தி மூலாதாரத்தில் எழும்பும் ஞானக்கனலை பிரம்ம தண்டம் என்னும் முதுகுத் தண்டு வழியே ஸஹஸ்ராரத்தை நோக்கிச் செலுத்துவோர்க்கு இறப்பே கிடையாது. அவர்கள் காலத்தைக் கடந்து இருப்பர் என்கிறார் திருமூலர்.

மேலும் 801-ஆவது திருமந்திரப் பாடலிலும் இதனை அழுத்தமாகக் கூறுகிறார்:

*இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்*
*துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்*
*உறக்கத்தை நீக்கி உணரவல் லார்கட்கு*
*இறக்கவும் வேண்டாம் இருக்கலும் ஆமே.*

பொருள்: தண்டுவடத்தின் இடப்புறமும் வலப் புறமும் வழியாக இடை-பிங்கலை நாடிகளின் ஊடே வழக்கமாக பிராணன் இயங்குவதை மாற்றி, சுழுமுனை நாடி வழியே பிராணனைச் செலுத்த வல்லவர்க்கு தளர்ச்சி ஏற்படாது. ஏனையோர் உறங்கும் காலத்தில் தாம் விழித்திருந்து ராஜயோகம் பயில வல்லவர்க்கு இறப்பே இல்லாமல் பலகாலம் வாழ்வர்.

## பௌர்ணமி நாட்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 23 | செவ்வாய் | அதிகாலை 03.25 | 24 | புதன் | காலை 5.18 |
| மே | 22 | புதன் | மாலை 6.47 | 23 | வியாழன் | இரவு 7.22 |
| ஜூன் | 21 | வெள்ளி | காலை 7.31 | 22 | சனி | காலை 6.37 |
| ஜூலை | 20 | சனி | மாலை 5.59 | 21 | ஞாயிறு | மாலை 3.46 |

# என்.ஆர். கே. (3)

## வி. நிரஞ்சன்

*காணும் தனை விட்டுத் தான் கடவுளைக் காணல்*
*காணும் மனோ மயமாம் காட்சி*

*(உள்ளது நாற்பது, 20)*

*வெளிவளி தீநீர் மண்பல உயிராய்*
*விரிவுறு பூதபெள திகங்கள்*
*வெளியொளி உன்னை அன்றிஇன்று*

*(அருணாசல பதிகம், 7)*

*மதுரை மீனாக்ஷி அம்மன் கோயில் முன்பாக, பின் மாலைப் பொழுதில் என்.ஆர்.கே. அவர்களுக்கு பரவசம் ஊட்டும் வகையில் அம்பாள் காட்சி தந்தனள். அதனை ஒட்டி அவரது மூலாதாரத்தில் இருந்து ஒளிப் பிரவாகம் மேல் எழும்பி சிரசில் தங்கிப் பின் கீழ் இறங்கியது. இந்நிகழ்வுகளை முன் பகுதியில் அறிந்தோம்.*

*முற்பிறவியிலேயே யோக சாதனையில் அவர் ஈடுபட்டு இருக்கவேண்டும். அது நிறைவு பெறாமல் இருந்திருக்க வேண்டும். இதன் நிறைவிற்காகவும், மெய்ஞான அடைவிற்காகவும், அவர் இளம் பருவத்திலேயே பகவானிடம் ஈர்க்கப்பட்டிருக்கின்றார் என்று ஊகிக்கலாம்.*

*கோபம்இல் குணத்தோய் குறியாய் எனைக்கொளக்*
*குறைஎன் செய்தேன் அருணாசலா (25)*

*என்னும் மணமாலைப் பாட்டு சாதகனின் தவக் குறைவை அருணாசல சன்னிதி கருத்தில் கொண்டே அவனது அகந்தையை முற்றிலும் அழித்து வீடு பெற அருள்கின்றது என்று உணர்த்துவதை அறிகின்றோம்.*

பின் 1934-இல் பகவானின் ஜயந்தி நிகழ்விற்கு என்.ஆர்.கே. வருகின்றார். 500 பக்தர்களுக்கும் மேலாக அன்னையின் சமாதி கோயிலுக்கு முன் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் அமர்ந்திருந்தனர். பக்தர்கள் சூழ பகவான் ஒரு மேடையில் வீற்றிருந்தனர். என்.ஆர்.கே. பகவானுக்கு அருகில் அவரையே நோக்கியவாறு அக்ஷரமணமாலையை மனதில் சொல்லிக் கொண்டிருந்தார். பகவானின் மகா மௌன சன்னிதியில் பக்தர்கள் அமைதியாய் அமர்ந்திருந்தனர்.

என்.ஆர்.கே. மணமாலைப் பாடல்களை மனதில் சொல்லிக்கொண்டே வருகையில் அவர் முன் பகவானின் உருவம் மறைந்து யானைத் தலையோடு கூடிய கணபதி தோன்றினார். சற்றே கழிந்து அவ்வுருவம் மறைந்துவிட ஒளி மிகுந்த மனித உருவம் வராக முகத்தோடு ஒளிர்ந்தது. பின்னர் அதுவும் மறைந்து முன்பு போல் மகரிஷி அமர்ந்திருப்பதைக் காண்கிறார். அவதாரங்கள் அனைத்தும் பகவானே என உறுதி செய்து கொள்கின்றார்.

அக்ஷரமணமாலையின் இறுதிப் பாடல்,

மாலை அளித்துஅரு ணாசல ரமணஎன்
மாலை அணிந்துஅருள் அருணாசலா

என முடிகின்றது. அப்பொழுது பக்தர்கள் ஒரு சேர எழ, தீப ஆராதனை நிகழ்கின்றது. பந்தலில் இருந்து ஒவ்வொரு பக்தருடைய கழுத்திலும் மாலை விழும் படி அமைத்திருந்தனர், என்.ஆர்.கே.யின் கழுத்திலும் மாலை விழுகின்றது. பகவானது கழுத்திலும் மாலை விழுகின்றது.

அப்பொழுது தற்செயலாய் என்.ஆர்.கே. பந்தலுக்கு அப்பால் அண்ணாமலையை நோக்கினார். அருண மலை விளிம்புகளில் மட்டும் கோடு தெரிய உட்புறம் ஊடுருவிப் பார்க்கும் அளவிற்குத் தெளிவாய் இருந்தது.

மலையின் உள்ளே சிவலிங்கம் அடியிலிருந்து சிகரம் வரை பரவி உயர்ந்து தோன்றிக் கொண்டிருந்தது. லிங்கத்தின் கழுத்தில் பல நிறங்கள் கொண்ட மாலை அலங்கரித்துக் கொண்டிருந்தது, என்.ஆர்.கே. அண்ணாமலையார் தனது மாலையை ஏற்றுக்கொண்டு விட்டார் என மனநிறைவு பெற்றார்.

அன்று மாலையில் பகவானும் அவரது திண்டுக்கல் பள்ளி சினேகிதனாயிருந்த நாராயண அய்யரும் பேசிக் கொண்டிருந்தனர். என்.ஆர்.கே.யும் உடன் இருந்தார். நாரயண அய்யர் மதுரைக் கல்லூரியில் கணித பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். திண்டுக்கல்லில் விளையாட்டுக்களில் மாணவர்கள் மத்தியில் இரண்டு தலைவர்கள் உண்டு என்றும் அது பகவானும் நாராயண அய்யரும் என்று குறிப்பிட்ட அய்யர், எல்லாப் போட்டிகளிலும் பகவானது குழுவே வெற்றி பெறும் என்றும், ஆதலால் மாணவர்கள் தங்கக் கை வேங்கடராமனையே (அதாவது பகவானையே) பெரிதும் சேர்ந்திருப்பர் என்றும் தெரிவித்தார்.

அதற்கு பகவான் கொடுத்த பதில் மிகவும் சிந்தித்தற்குரியது. “நாராயணா, எனக்கு ஓர் உடல் இல்லை. அதை வெகு காலம் முன்பே இங்கு வந்தபோதே இழந்து விட்டேன். நான் உடல் அற்றவனாகிவிட்டதால் ‘தங்கக் கை’ என்று பெயர் வாங்கிய கை எங்கே உள்ளது? நம் இருவரில் ஒருவன் உடல் இல்லாமல் மறைந்து விட்டான். ஆதலால் மிஞ்சி இருக்கும் மற்றவனுக்கே அந்தப் பட்டம் உரியது” என்றனர் பகவான்.

ஜயந்தியை ஒட்டிய ஒரு மாலையில் என்.ஆர்.கே. தியான கூடத்தில் பகவானின் முன் அமர்ந்து இருக்கின்றார். அவரது புருவத்தின் மேல் பிரகாசமான ஒளிப் புள்ளி மதுரையில் அவருக்கு நிகழ்ந்த பரவச நிகழ்ச்சியின் அறிகுறியாய் இருந்துகொண்டிருந்தது.

அலமேலு அம்மாள் திருப்புகழ் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார். அதில் கவனம் செல்லாத என்.ஆர்.கே. அக்ஷரமணமாலையை மனதில் சொல்லிக் கொண்டிருந்தார். அவரது மூச்சை அடக்கிக் கொண்டு இமையாத கண்களால் பகவானை நோக்கியவாறே பாடல்களைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

திடீரென்று பகவான் உமையொரு பாகனாக இடப் புறம் பெண்ணாயும் வலப்புறம் ஆணாயும் தோற்றம் அளித்தார். மேலும் பகவானது கண்கள் என்.ஆர்.கேயின் கணகளை ஊடுருவி இறுகப் பிடித்துக்கொண்டிருந்தன.

திடீரென்று என்.ஆர்.கே.யின் கபாலம் இரண்டாகப் பிளந்து, சிவப்பு நிற ஒளி உள்ளே இருந்து சீறிக்கொண்டு பிரகாசமாக கபாலத்தின் வெளியாய் வெளியேறியது. அப்போது உமாமகேஸ்வரத் தோற்றத்தில் உமையவள் பக்கத்தில் இருந்து அமுத ஒளி வெடித்து வெளிக் கிளம்பியது. இரண்டு ஒளிக் கற்றைகளும் ஒன்று சேர்ந்து என்.ஆர்.கேயின் கபாலத்தில் வந்து இறங்கின. கபாலத்தின் பிளவு மூடப்பட்டு சுவடு தெரியாமல் பூசப்பட்டது.

வெளித்தோன்றிய ஒளிப் பிழம்புகள் மறைந்தன. ஆனால் அவை கபாலத்தின் உள்ளே பிரகாசமன மின்னல் கீற்றுபோல் நீடித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவரது உடலோ தலையோ கடும் வெப்பத்தை உணரவில்லை. பதிலாக தலையும் உடலும் புத்துணர்ச்சி அளிக்கும் குளிர்மையை உணர்ந்தன. மாலை ஆகிவிட்டிருந்தது. இரவும் வந்தது. என்.ஆர்.கே. அங்கேயே உணவு உட்கொள்ளாமல் படுத்து உறங்கி விட்டார்.

அடுத்த நாள் காலையில் ரிபு கீதையின் பாடல்கள் சொல்லப்பட்டு வந்தன. அகம் பிரம்மம், அகம் பிரம்மம், என்னும் சொற்றொடர் திரும்பத் திரும்ப

சொல்லப்பட்டு வந்தது. அப்போது என்.ஆர்.கேயின் இதயத்தின் வலப்புறம் இருந்து அகம் பிரம்மம் என்னும் எதிர் ஒலி அதிரத் துவங்கியது. அவரது தலையின் உட் புறத்திலும் புருவத்தின் மேலும் இருந்த ஒளி இதய மையத்தை நோக்கி ஈர்க்கப்பட்டது. அம் மையத்திலிருந்து இதமான அதி நுண்ணிய இனிய ஒளிப் பிளம்பு வெளிக்கிளம்பி அவரது உடல் எங்கும் பரவி அதீத இன்பம் கூடிய அலைகளால் நிறைந்தது.

இந்த அமுத வெளிப்பாடு தோலின் அதி நுண்ணிய துவாரங்களின் வழியாய்ப் பொழிய ஆரம்பித்தது. அந்த அமுத வெள்ளப் பெருக்கைத் தாங்க முடியாமல் என்.ஆர்.கே. தியான கூடத்தில் இருந்து வெளியே விரைந்தார். அந்த ஒளி வெள்ளம் அனைத்துப் பொருட்களையும் நனைத்துக் கொண்டே விரிந்து பரந்து ஆகாயத்தில் எங்குமாய் நிறைந்தது. சத்தும் சித்தும் கூடி ஆகாயம் எங்கும் உணர்வு அலைகளாய் விளங்கிக்கொண்டிருக்க, அந்த சிதாகாசத்தில் என்.ஆர்.கே. உட்பட எல்லா நாம ரூபங்களும் நிழல் போன்ற பனி இழைகளாய் எங்கும் பரவி மிதந்து கொண்டிருந்தன.

என்.ஆர்.கே. ஒரு மாயாவிபோல் கூடத்திற்குள் நுழைந்தார். உட்காருகின்ற சமயத்தில் அவரது மனதில் ஓர் எண்ணம் ஒலிக் கீற்றாய்த் தோன்றியது; நான் இந்த அருணாசலத்தின் காடுகளில் மீண்டும் வெளிவராது மறைந்து விடவேண்டும என்பதே அந்த எண்ணக் கதிர்.

உடனேயே அவரது மனைவி அவர்களது பிள்ளைகளோடு அவர் முன் நிற்கின்றார். கண்களில் நீர் நிறைந்திருக்கின்றது. ஸ்ரீ பகவான் அவரை நோக்கினார், உறுதியான உரத்த குரலில் கூறுகின்றார். “கிருஷ்ணமூர்த்தி, உனது குடும்பத்துடன் மதுரைக்குத் திரும்பிச் செல், எந்த முக்தியை நீ துறவியாய்



இருந்து அடைய விரும்புகிறாயோ அந்த முக்தியை இல்லத்தில் இருந்துகொண்டே உனது பணிகளைச் செய்து கொண்டே நீ அடைவாய். நான் சொல்கின்றேன் வீட்டிற்குச் செல்."

நிகழ்வது உண்மையா வெறும் காட்சியா? என்.ஆர்.கே.யால். உறுதி செய்ய இயலவில்லை.

தொடரும்

# நமக்குள் பகவான்

**D. தியாகராஜன்**

நாம் அனைவரும் நமது ஒவ்வொரு அன்றாட நிகழ்வுகளையும் செயல்களையும் அவ்வப்போதே புகைப்படமாகவோ ஒளிப்படமாகவோ பதிவு செய்து உடனுக்குடன் அனைவருக்கும் பகிர்ந்து மகிழ்ந்து வருகிறோம். இந்த வசதிகள் கைபேசியினால் பெருகியுள்ளன. ஒவ்வொரு கைபேசியிலும் நாம் எண்ணற்ற புகைப்படங்களை தினசரி பதிவு செய்கிறோம். செய்திகள், கோப்புகள் தினமும் நமக்கு செய்திகளாக குவிகின்றன. புதிய வகை கைபேசியில் நினைவகம் மேம்படுத்தப்பட்டு நாளுக்கு நாள் அதிக திறனுடனும் வசதிகளுடன் வந்து கொண்டிருந்தாலும் அதிகரித்தாலும் நமக்கு கைபேசியில் நினைவகத்தின் அளவும் வேகமும் போதவில்லை.

கைபேசியோ கணினியோ செயல்திறன் குறைந்தால் நாம் அதில் உள்ள தேவையற்ற குப்பைகளை நீக்குகிறோம். தேவையற்றவை நீங்க நீங்க மின்னனு சாதனங்களோ கைபேசியோ தனது திறனை நன்கு வெளிப்படுத்துகிறது.

இதைப்போலவே மனித மனங்களிலும் தேவையற்ற எண்ணக் குப்பைகள் குவிந்து கொண்டிருக்கின்றன. மனத்தினுள்ளும் தேவையற்ற எண்ணங்கள் நீங்க நீங்க நமது செயல்திறனும் கூடும்.

மனத்தினுள்ளும் தேவையற்ற எண்ணங்கள் நீங்க நீங்க நமது மனம் அந்தர்முகப்படும். இதனையே பகவான் ரமணரும் நானார் என்னும் விசாரணையில் நினைவுகளை அழித்து மனத்தை அந்தர்முகமாக்கும் மனமடங்கும் உபாயத்தை இவ்வாறு உபதேசித்துள்ளார்.

நானார் என்னும் விசாரணையினாலேயே மன மடங்கும். நானார் என்னும் நினைவு மற்ற நினைவுகளை யெல்லா மழித்துப் பிணஞ்சுடு தடிபோல் முடிவில் தானு மழியும். எழும் எண்ணங்களை பூர்த்தி செய்ய விழையாமல் அவை யாருக்குண்டாகின்றன என்று விசாரித்தால் மனம் பிறப்பிடத்திற்கே திரும்பும். எழும் எண்ணங்கள் அடங்கும். மனம் பிறப்பிடத்தில் தங்கி நிற்கும் சக்தி அதிகரித்து நாம ரூபங்கள் மறையும். இவ்வாறு மனத்தை ஹ்ருதயத்தில் வைப்பதற்கு அகமுகம் அல்லது அந்தர் முகம் என்று பெயர். நான் எனும் நினைவு முற்றிலும் நீங்குமிடமே சொரூபமாகும். அதுவே மௌனம். இந்த நிலைக்கு ஞானதிருஷ்டி என்று பெயர்.

ஆன்மா தான் இறைவன். இறைவன் உனக்குள்தான் இருக்கிறான். என்கிறீர்கள் உள்ளிருக்கும் இறைவனை தரிசிப்பதெப்படி? என்று ஒரு அன்பர் ரமணரிடம் வினவுகிறார்.

அதற்கு பகவான் அளித்த விடையினைக் காண்போம்.

ப: நமக்குள்ளேதான் பகவானைக் காணவேண்டும். மனம் உண்முகப்பட்டால், உணர்வுக்குணர்வாய், உள்ளுணர்வாய், அவர் விளங்குவார்.

கே: அனைத்தினுள்ளும் பகவான் இருக்கிறார், அனைத்திலும் அவரைக் காணவேண்டும் என்று சொல்கிறார்களே!

ப: ஆமாம். அனைத்தினுள்ளும் பார்ப்பவனாய் இருக்கிறார் பகவான். வேறெங்கே, எப்படி அவரைப் பார்ப்பது? வெளியே எப்படி அவரைக் காண்பது? உள்ளேதான் பார்க்கவேண்டும். வெளி விஷயங்களை மனத்தாற் காண்கிறோம். அவற்றினுள் பகவானைக் காண்பதென்பது மனோவியாபாரமே, மனோமயக்காட்சியேயாகும். அது வாஸ்தவ மாகாது;

ஏனெனில் மனமற்ற தூய உணர்வே (சுத்த சைதன்யமே) கடவுளின் சொரூபம்.

உண்முகம் அல்லது அந்தர் முகம் என்பதைப் பற்றி கீழ்க்கண்ட மகாராஜா துறவு பாடல் (102) இவ்வாறு விளக்குகிறது.

பற்றிலை யாயி னவையினி லிருப்பேன்
பழையவூழ் வினையெனி லாசை
சற்றெனு முதிப்பித் தல்லவோ வூட்டுஞ்
சகவின்பி லிறையெனு மிச்சை
முற்றுணர் ஞானத் தோர்கள்பூண் பர்களோ
முடிவிலா னந்தமே பெருகி
நிற்றலே மீட்டும் விழிப்பினுங் கான
னீரிற்கண் டுண்முக மடைவார்.

பொருள்: இல்லற வின்பத்தில் விருப்பமில்லாத போது அவ் வில்லறத்திலும் அவைபோன்றவைகளிலும் வாழ்தல் எதற்காக? பிராரத்துவ கன்மமெனில், இச்சையைக் கொஞ்சமாவது உண்டாக்கியல்லவோ அனுபவிக்கச்செய்யும்? பரிபூரண ஞானத்தை யுடையவர்கள் பிரபஞ்சத்திற் சற்றேனும் விருப்ப மடைவார்களோ? நாசமில்லாத ஆனந்தத்தை அநுபவித்து நிற்றலே அவர்களியல்பு. பின்னும் சகமுகமாகமனஞ் செல்லினும், அதனைக் கானற் சலத்தைப்போல் பொய்த் தோற்றமாகவே பார்த்து அந்தர்முகமாக நிற்பார்கள்.

வெளியில் அலைந்து திரிந்தவன் வீட்டிற்கு வந்தவுடன் நிழலில் ஆனந்தத்தை அனுபவிக்கிறான். அதுபோல புலன்கள் வெளியில் உழலும்போது துக்கம் உண்டாகிறது. அவைகள் உண்முகப்படும்போது ஆறுதல் அடைகின்றது. இதுவே பேரானந்தம். மோட்சம். ஐம்புலன்களையும் ஆமையைப் போல அடக்குமிடத்தில் சுகம் உண்டாகிறது.

பிரம்மமானது வெளிமுகமாக அலையும் மனத்திற்கு எட்டாதது என்றும் அகமுகப்பட்டால் மனதுக்கு பிரம்மம் அறியப்படும் என்று இதனையே கைவல்ய நவநீதமும் விளக்குகிறது.

*தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை*
*தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்*
*தன்னை அறியும் அறிவை அறிந்தபின்*
*தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே (355)*

மனிதன் ஞானத்தவம் செய்து தன்னையே தான் அறிவதற்கு ஒரு கேடுமில்லை. முயற்சி எடுக்காது தன்னைத் தானறியாமல் மாண்டு போகிறான். தன்னையே தான் காணக்கூடிய ஞான மார்க்கத்தை அறிந்த பின், தன்னை அருளோடு இயக்குவிக்கும் ஜீவனை அர்ச்சிக்கும் நிலையில் சூக்கும சரீரம் விளங்கும் என்பது இதன் பொருள்.

நானென்னும் ஜீவபோதம் அழிந்து கடவுளைக் காணும் உபாயத்தை பகவான், *உள்ளது நாற்பது* பாடல் 26-இல் விளக்குகிறார்.

*தன்னைத்தான் காண றலைவன் றனைக்காண*
*லென்னும்பன் னூலுண்மை யென்னையெனின்*
*றன்னைத்தான்*
*காணலெவன் றானொன்றாற் காணவொணா*
*தேற்றலைவற்*
*காணலெவ னூணாதல் காணவையுங் காணும்.*

பொருள்: ஜீவ சொரூபனாகக் கருதும் தன் சொரூபத்தை அறிவது, தனக்காதாரமான கடவுளைக் காண்பது என்று கூறப்படும் சாஸ்திரங்களின் உண்மை நோக்கம் என்னவென்று கூறுகிறேன். தான் என்னும் மெய் உணர்வு இரண்டற்ற ஒன்றேயாதலால் தன் சொரூபத்தைத் தானே காண்பவன் எவன்? தன்னைக் காணுவதே முடியாதென்றால் கடவுளைக் காணுவது எப்படி? தான், தனதுண்மை சொரூபமாகிய கடவுளுக்கு,

உணவாகப் போவதே (நான் என்னும் ஜீவபோதம் அழிவதே) கடவுளைக் காணுவதாகும்.

இதே கருத்தை,

*தானா யிருத்தலே தன்னை யறிதலாம்*
*தானிரண் டற்றதால் உந்தீபற*
*தன்மய நிட்டையீ துந்தீபற*

உபதேச உந்தியார் பாடலிலும் (பாடல் 26) இல் காணலாம்.

நாம் பார்க்கும் கண் ஜடம் ஆகும். கண்ணின் வழியே காண்பது மனமே. ஆகையால் மனமே கண்ணாகும். இந்த மனமாகிய கண்ணுக்கும் கண்ணாக காண்பது ஆன்மா இறைவனான அருணாசலன் என்று அக்ஷரமணமாலை 15-ஆம் பாடலில் பகவான் விவரிக்கிறார்.

*கண்ணுக்குக் கண்ணாய்க் கண்ணின்றிக் காணுனைக்*
*காணுவ தெவர்பார் அருணாசலா (அக்ஷரமணமாலை 15)*

ஆறாவது அறிவாகிய சூக்கும சரீரம் எவ்வாறு தோன்றும் என்று அனுபவத்தால் கண்ட ஞானிகள் கூறும் சான்றுகளைக் கேட்போம்:

உன்னுடைய உருவத்தைக் கண்ணாடியில் காண்பதைப் போன்று வியக்கத்தக்க வகையில் உன்னுடைய சூக்கும சரீரம் தோற்றமளிக்கும். உன்னுடைய ஞானத்தவப் பலன் அந்த நிழல் உருவத்தின் வழியாக உலவும். தன்மையுடைய நல்ல மாணாக்கனே! இவ்வாறு தன்னைத்தானே காண்பதுதான் ஆன்றோர்களால் ஞானம் என்று போற்றப்படும் என்பது இதன் பொருள். (கைவல்ய நவநீதம் 2:11)

ஔவைக் குறள், பரிபாஷைத் திரட்டு, பட்டினத்தார் பாடல்களும் இக்கருத்தை உறுதிபடுத்துகின்றன.

*கண்ணாடி தன்னில் ஒளிபோல் உடம்பதனுள்*
*உண்ணாடி நின்ற ஒளி (ஔவைக் குறள், 231)*

*கண்ணாடி முகம் போலக் காணும் பாரு*

*(அகத்தியர் பரிபாஷைத் திரட்டு, 5:65)*

*என்னையே நானறிய இருவினையும் ஈடழித்துத்*
*தன்னை அறியத் தலம் எனக்குச் சொன்னான்டி*


*(பட்டினத்தார், அருள் புலம்பல், 22)*

எந்நூலும் முத்தியடைவதற்கு மனத்தை யடக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ள படியால் மனோ நாசமே நூல்களின் முடிவான கருத்து என்றறிந்து கொண்டபின் நூல்களை யளவின்றிப் படிப்பதால் பயனில்லை. மனத்தையொழிக்க தன்னை யாரென்று விசாரிக்க வேண்டுமே யல்லாமல் எப்படி நூல்களில் விசாரிப்பது? தன்னுடைய ஞானக்கண்ணால் தன்னைத் தானே அறியவேண்டும். தான் என்பது உள்ளேயிருப்பது. நூல்களோ வெளியிருப்பவை. எனவே தன்னை நூல்களில் விசாரிப்பது வீணே.

பந்தத்திருக்கும் தன்னை யாரென்று விசாரித்துத் தன் யதார்த்த சொரூபத்தைத் தெரிந்து கொள்வதே முக்தி. சதாகாலமும் மனத்தை ஆன்மாவில் வைத்திருப்பது ஆன்ம விசாரம். தியானமோ தன்னை சச்சிதானந்த பிரம்மமாக பாவிப்பது. கற்றவை யனைத்தையும் ஒரு காலத்தில் மறக்க வேண்டிவரும். குப்பையைக் கூட்டித் தள்ள வேண்டிய ஒருவன் அதை ஆராய்வதால் எப்படிப் பயனில்லையோ அப்படியே தன்னையறிய வேண்டிய ஒருவன் தன்னை மறைத்துக் கொண்டிருக்கும் தத்துவங்கள் அனைத்தையும் சேர்த்துத் தள்ளிவிடாமல் அவைகளை ஆராய்வதில் பயனில்லை என்கிறார் பகவான் ரமணர்.

இதை உணர்த்தும் ஒரு சுவையான நிகழ்ச்சியினை இங்குக் காண்போம்.

ஒருசமயம் முருகனார் ஹாலுக்குள் நுழைந்து பகவானை நமஸ்கரிக்கும்பொழுது பகவானுக்கு



முன்னால் சில புத்தகங்கள் துணியால் மூடி வைக்கப் பட்டு மேலே மாலையும் போடப் பட்டிருந்தது. அப்பொழுதுதான் அவருக்குத் தெரியும் அன்று சரஸ்வதி பூஜையென்று. பூஜையில் இருந்த புத்தகங்களை ஒரு பார்வை பார்த்துப் பின்னர் அதற்கு முன்னால் உட்கார்ந்திருந்த தன்னுடைய சத்குருவைக் கண்டார். அவருடைய முகம் புன்னகையால் மலர்ந்தது. இதைக்கண்ட பகவான் அவரைக் கேள்விக்குறியோடு நோக்கினார்.

முருகனார் பகவானுடன் கொண்ட தொடர்பு தனித்தன்மை வாய்ந்தது. மனித உருவில் வந்து எல்லோரையும் ஆன்மிகப் பாதையில் வழிநடத்த வந்த உணர்வின்முன் நிற்கிறோம் என்று அவருக்குத் தெரியும். முருகனார் பகவானிடம், பகவானே! உங்களுக்கு முன்னால் இப்புத்தகங்களை வைத்துப் பூஜை செய்வது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. நல்ல கரும்பு ரசத்தை எடுத்து அதிலிருந்து அருமையான சர்க்கரைப் படிகங்களை உண்டாக்கி அதை மனித

உருவாகச் செய்தால் எப்படி இருக்கும்? இந்த மிக உன்னதமான சர்க்கரையைக் கொண்டு செய்யப்பட்ட மனித உருவம் ஒரு பக்கத்தில் இருக்கிறது. இன்னொரு பக்கத்திலோ கரும்புச் சக்கை இருக்கிறது. பகவான்! நீங்கள்தான் உண்மையின் சாராம்சமாக இருக்கிறீர்கள். இந்தப் புத்தகங்களெல்லாம் எவ்வளவு புனிதமாக இருந்தாலும் கரும்புச் சக்கையை ஒத்தவை. மிக அழகான சர்க்கரை உருவில் வந்து உட்கார்ந்திருக்கும் உங்களை விட்டு ரசமெடுத்த கரும்புச் சக்கைக்கு பூஜை செய்ய இவர்களெல்லாம் முனைகிறார்கள் என்று கூறிச் சிரித்து விட்டார். அந்தச் சிரிப்பில் பகவானும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியை வைத்து ஒரு பாடலை முருகனார் இயற்றினார்.

வேங்கடவன் வீற்றிருக்கும் வேதிகைக்கட் பெம்மானோடு
ஆங்கடுக்க லாக அமைந்தநூல் ஓங்கடுக்கல்
மிக்கதீங் கட்டியொடு வேய்ந்த வெறுங்கருப்பஞ்
சக்கைமாலை யென்னும் தகைத்து.

ஸ்ரீ ரமண தேவமாலை, 184

ஆத்மாவில் நிலைத்திருக்கும் குருவானவர் எதைச் செய்கின்றார்களோ அல்லது எதனை உலகத்தார்க்கு அவர்கள் போதிக்கின்றார்களோ அதைப் பின்பற்றுவது சாலச் சிறந்தது. இக்கருத்தினை பகவத் கீதையின் அத்தியாயம் 3 சுலோகம் 21-ஆம் வலியுறுத்துகின்றது.

யத்கயதாகசரதி ஸ்ரேஷ்டஸ்தத்ததேகவேதரோ ஜந:।
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததகநுவர்ததே ॥321॥

எதனை யெதனை உயர்ந்தோன் செய்கிறானோ அதனையே ஏனையோர் பின்பற்றுகிறார்கள். அவன் எதை பிராணப்படுத்தி நியாயப்படுத்துகின்றானோ அதையே உலகத்தார் தொடருகிறார்கள்.

பல சாத்திரங்கள் கற்றாலும் அகந்தை அழிந்து நமது ஆன்மாவைக் காண்பதற்கு குருவின் அருட்சக்தி வாய்ந்த

பார்வை நம்மேல் பட்டு நமது அகந்தை எழாமல் செய்ய வேண்டும் என்பதை கீழ்க்கண்ட முருகனாரின் பாடல்களும் உறுதிசெய்கின்றன.

*ஓரிடமுந் தங்காமல் ஓடோடித் தேடியுமே*
*காரிருளை யென்றுந்தான் காணாத சூரியன்போல்*
*வாடாத மாமாயை வல்லிருளைக் காணவே*
*கூடாதா னெங்கள் குரு.*

*ஸ்ரீ ரமண தேவமாலை, 137*

*சிவன்சேர்வ தாலே தெளிவதோ? சித்தத்(து)*
*அவன்சேர்வ தத்தெளிவி னாலோ? அவலஞ்செய்*
*பேதமறும் ஒன்றைஇரு வேறாகப் பேதுறுவார்க்(கு)*
*ஓதமறு மாற்றமில் லோம்.*

*குருவாசகக் கோவை, 604*

அருணாசலனின் அருட்பார்வையானது நம் உள்ளத்தில் 'நான் நானே' என்று ஸ்புரிப்பதாகும். எனவே, அருணாசலன் நம்மைக் காணும் கண்ணே நாம் ஆன்மாவைக் காணும் கண்ணுமாகும். 'அந்தமிலாக் கண்' எனப்படும் அந்தக் கண் 'இருக்கிறேன்' என்ற பிரக்ஞை வடிவில் விளங்கும் நம் இருப்பே யாகும்.

*பார்த்தனன் புதுமை உயிர்வலி காந்த*
*பருவதம் ஒருதரம் இதனை*
*ஓர்த்திடும் உயிரின் சேட்டையை ஒடுக்கி*
*ஒருதன தபிமுக மாக*
*ஈர்த்ததைத் தன்போல் அசலமாச் செய்தவ்*
*வின்னுயிர் பலிகொளும்; இஃதென்*
*ஓர்த்துய்மின் உயிர்காள் உளமதில் ஒளிரிவ்*
*வுயிர்க்கொலி அருணமா கிரியே.*

*அருணாசல பதிகம், 10*

உலகத்தில் வாழும் மக்களே! கண்டேன் ஒரு அதிசயத்தை! தன்னை நினைக்கும் உயிரைக் கவர்ந்து இழுக்கக்கூடிய காந்த சக்தியை உடைய மலை இது. இதை ஒருதரம் நினைக்கக்கூடிய ஜீவனின் மனச்

சலனங்களை ஒடுக்கி, தன்போலவே சலனமறச் செய்து, அதனைத் தனக்கு உணவாக உண்டு விடுகிறது. இது என்ன ஆச்சரியம்! உள்ளத்தில் உயிருக்கு உயிராய் விளங்கும் இந்த அருணாசலத்தையே இடைவிடாது மனதில் நினைத்து அழிவற்ற பூரண வாழ்வினை அடைந்து உய்வீராக.

இக்கருத்தை அருணாசல அக்ஷணமணமாலையிலும் கூறுகிறார்

பார்த்தருண் மாலறப் பார்த்திலை யெனினருள்
பாருனக் கார்சொல்வ ரருணாசலா 65

ஒருசமயம் நாராயண அய்யர் எனும் அன்பர் பகவானை சந்திக்க தனது நண்பரின் வற்புறுத்தலால் விருப்பம் இல்லாமல் ஆச்ரமம் வந்து பகவானை சந்தித்தார். பின்னர் பகவானால் முழுவதும் ஆட்கொள்ளப் பட்டார். ஒருசமயம் உள்ளது நாற்பதின் பொருளை பகவான் அன்பர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார். அந்தமிலாக் கண் பற்றியும் கடவுளை அறிய கடவுளாக வேண்டும் என்றும் அவர் அருளியதையும் பகவான் எவ்வாறு அவரை ஆட்கொண்டார் என்பதையும் அவர் நினைவுகள் வாயிலாக காண்போம்:

உள்ளது என்னும் சொல்லை உணர்வு அல்லது இருக்கும் என்னும் அர்த்தத்தில் உபயோகித்திருந்தார். வெண்பாவிற்கு வெண்பா அவர் படித்து, எங்கிருந்தோ வரும் ஒலி போல், இனிமையான சீரான ஒரே குரலில் விவரித்தார். இந்தக் காட்சியில் உச்சக் கட்டம் வந்தது. அதிலுள்ள நான்காவது வெண்பாவின் இறுதி அடியில் வரும், 'கண்ணலால் காட்சியுண்டோ கண்ணதுதான் அந்தமிலாக் கண்ணாமே' என்ற வரிகளுக்கு இவ்வாறு விளக்கமளித்தார்:

கடவுளைக் கண்ணாலோ அல்லது பிற பொறிகளாலோ காணவோ அறியவோ முடியாது.

கடவுளை அறியக் கடவுளாகவே ஆகவேண்டும் என்பதுதான் இதன் பொருள். இவ்வாறு பகவான் கூறியதும் அங்கிருந்த திடகாத்திரமான பக்தர் ஒருவர் (அவர் பெயர் தண்டபாணி சுவாமி என்று பின்னர் அறிந்தேன்) குறுக்கிட்டு, "இதைப் பகவான் தன்னுடைய அனுபவத்தின் மூலம் கூறுகின்றாரா?" என்று வினவினார்.

இந்த வெளிப்படையான கேள்விக்கு பகவான் வெளிப்படையாகப் பின்வரும் பதிலைக் கூறினார்:

"இல்லை என்றால் எனக்கு இம்மாதிரி கூறத் தைரியம் வருமா?" இவ்வாறு பகவான் கூறிய வார்த்தைகள் என்னை மிகவும் தீவிரமாகச் சிந்திக்க வைத்தன. இரண்டையும் சேர்த்துத் தீவிரமாகச் சிந்தித்ததும் கிடைக்காத பதில் ஒரே கணத்தில் எனக்குக் கிடைத்தது. கடவுளைக் காணுதல் என்பது கடவுளாகவே இருப்பது. நம்முடைய புலன்களால் கடவுளை அறிய முடியாது. அவனை அறிய ஒரே வழி அவனாகவே மாறுவது. எல்லா மதங்களும் கடவுள் என்று பறைசாற்றும் ஒருவன் இரத்தமும் சதையும் கொண்ட மனித உருவில் என் முன்னால் தோன்றுவதாகக் கொண்டால், அவன்தான் இது. என்னுடைய உடம்பு புல்லரித்து எங்கிருந்தோ ஆழத்தில் இருந்து ஓர் உணர்வு எழும்பியது. இந்தமாதிரி உணர்வலைகள் தொடர்ந்து எழும்பின. என்னுடைய உடம்பு முழுவதும் பரவசத்தால் நடுங்கியது. நான் அந்தக் குடிலை விட்டு வெளியே வந்து என் சகஜ நிலைக்கு வர முயற்சி செய்தேன். நான் வந்தேன், கண்டேன், அவன் என்னை ஆட்கொண்டான்.

கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார். அவர் ஒவ்வொரு உயிர்க்குள்ளும் நிறைந்திருக்கிறார். இக்கருத்தை பாம்பாட்டி சித்தர் இவ்வாறு விவரிக்கிறார்.

எள்ளிலெண்ணெய் போலவுயி ரெங்கு நிறைந்த
ஈசன் பதவாசமலர் எண்ணி யெண்ணியே

*உள்ளபடி அன்புபத்தி ஓங்கி நிற்கவே*
*ஒடுங்கிய டங்கித்தெளிந் தாடு பாம்பே.*

பொருள்: எள் முழுவதும் எண்ணெய் நிறைந்திருப்பது போல எல்லா உயிர்களிலும் இருந்து விளங்குகின்ற ஈசனின் பதத்தை எண்ணி (நினைத்து) பக்தி கலந்த அன்பில் ஓங்கி நின்று ஐம்புலன்களையும் ஒளித்து இறை நிலை நினைத்து ஆடு பாம்பே.

*கருத்திலான் வெளுத்திலான் பரன்இருந்த காரணம்*
*இருத்திலான் ஒளித்திலான் ஒன்றும்இரண்டும் ஆகிலான்*
*ஒருத்திலான் மரித்திலான் ஒழிந்திடான் அழிந்திடான்*
*கருத்தில்கீயும் கூவும்உற்றோன் கண்டறிந்த ஆதியே.*

*(333)*

என்கிறார் சிவவாக்கியர்.

கடவுளும் குருவும் வேறல்லர் என்கிறார் பகவான். கடவுளையோ குருவையோ இத்தன்மையில் இந்த வடிவில் இருப்பார் என்று ஒரு இலக்கணத்தில் அடக்க முடியாது என்பதை நமது அருளாளர்கள் எவ்வாறெல்லாம் வியந்து அருளியுள்ளார்கள் என்பதை ஒருசில பாடல்களின் வாயிலாகக் காண்போம்:

*யார் அறி வார் எங்கள் அண்ணல் பெருமையை*
*யார் அறி வார் அந்த அகலமும் நீளமும் - திருமூலர்*

*தன்மை யாரும் அறிவாரில்லை*
*தாம்பிறர் எள்கவே - ஞானசம்பந்தர்*

*சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற*
*சொலற்கரிய சூழலாய் இதுவுன் றன்மை - அப்பர்*

*எவ்வுருவோ நின்னுருவம் எது? - காரைக்காலம்மையார்*

*வாசித்துக் காணொ ணாதது*
*பூசித்துக் கூடொ ணாதது*
*வாய்விட்டுப் பேசொணாதது - அருணகிரியார்*

*சொல்லுக் கடங்காச் சுகப்பொருளை*
*சொல்லாய தொகுதியெலாங் கடந்து நின்ற*
*சொரூபானந் தச்சுடரே. - தாயுமானவர்.*

விருப்பு வெறுப்பின்றி அனைத்து ஜீவராசிகளி னுள்ளும் உறையும் ஆன்மாவை இறைவனாகக் கண்டனர் அருளாளர்கள். மெய்ப்பொருள் நாயனார் வாளால் குத்தப்பட்ட நிலையிலும் கொல்ல வந்தவனை இறைவனாகவே பாவித்து பாதுகாப்பாக அனுப்பினார் என்பது நாயன்மார்கள் வரலாறு.

நாமும்கூட நமது கருத்துக்கு முரண்படுபவரோ அல்லது எதிரியாக பாவிப்பவர்கள் இல்லத்திற்கு செல்ல நேரிடும் போதுகூட அங்கே இருக்கும் இறையுரு அல்லது குருவின் படத்தை காணும்போது அந்த நபரின் மேல் வெறுப்பு இருந்தாலும் நம் இல்லத்தில் எவ்விதம் சிரத்தையுடன் வழிபடுவோமோ அதே பக்தியுடன்தான் வணங்கி நமஸ்கரிக்கிறோம். எங்கிருந்தாலும் பகவான் பகவான்தான். நமக்குள் ஆன்மாவாக ஒளிரும் அந்தப் பேரொளிதான் அனைவருள்ளும் பிரகாசிக்கின்றது என்று உணர்ந்து அந்த ஆன்மாவை வணங்கினால் விருப்பு வெறுப்பு இரண்டும் ஒழிந்து அனைவருக்குள்ளும் கடவுளைக் காணலாம்.

பன்னெடுங்காலமாக வேதகாலந்தொட்டு பல்வேறு ரிஷிகளும் மகான்களும் இந்த பரம சத்தியத்தை உபதேச மொழிகளாக அருளியுள்ளார்கள். நாமும் பல்வேறு வடிவத்தில் தினம் தினம் படிக்க நேர்கிறது. குறுஞ் செய்திகளாக தினம் பெறுகிறோம். பகிர்கிறோம். ஆனால் அதன் உண்மையான பொருளை உணரும் நொடி எல்லோர்க்கும் படித்தவுடனே அமைவதில்லை. யாரோ ஒருவர் அதை உணர்கிறார். ஒவ்வொருவருக்கும் பல நாட்கள், வருடங்கள் யுகங்கள் ஆகின்றன அவரவர் நிலைக்கேற்ற உணரும் காலம் மாறுபடுகிறது. அந்த நொடி நமக்கெப்போது வாய்க்கும் என்று அறியாமல் காத்திருக்கிறோம். பகவான் அந்த உணரும் தருணத்தை நமக்கு ஏற்படுத்தித் தர நமக்குள் இருக்கும் பகவானை பிரார்த்திப்போமாக.

# தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம்

**சிதம்பர குற்றாலம்**

ஒருவரின் தேடலில் ஈடுபாடும், வைராக்கியமும் இருக்குமானால் அவர்களது தேடலுக்கான ஒளி விளக்கு உலகத்தில் எங்கிருந்தாலும் அவர்களை அங்குக் கொண்டு சேர்க்கும். பிரம்மதேவரின் புதல்வர்களான சனகர், சனத்குமாரர், சனந்தனர், சனத் சுஜாதர் ஆகிய நால்வரும் வைராக்கியத்துடன் பிரம்மத்தை உணர்த்துபவரைத் தேடி அலைந்தனர். தவசீலர்களான அவர்களுக்குக் கிடைத்த விளக்கங்கள் நிறைவைத் தராததால், தேடலில் உறுதியும் வைராக்கியமும் தொடர்ந்தது. தேடலின் உச்சம் உரியவரைத் தொட்டதால் கருணைக் கடலான பரம்பொருளே. அவர்களது தேடலுக்கு இரங்கி தட்சிணாமூர்த்தியாக உருவெடுத்து நால்வரும் வருகிற வழியில் அவர்களது வரவை எதிர்நோக்கி இளங்குமரனாக ஆலமரத்தடியில் தென்முகமாக சின்முத்திரையில் மௌனமாக அமர்ந்திருந்தார்.

காந்தம் இரும்பை ஈர்ப்பதுபோல அந்த யுவனின் மௌனம் நால்வரையும் ஈர்த்தது. அவர்களும் வந்தமர்ந்தனர். அங்கு உபதேசமுமில்லை, கேள்வியும் இல்லை. மௌனமே நிலவியது. மௌனத்தின் ஆழம் கேள்விகளை அற்றுப்போகச் செய்து, அறியாமையை அழித்தது. மௌனம் அவர்களை ஊடுருவி மௌனமாம் தன்னிலையில் நிறுத்தியது. தன்னை உணர்ந்த அவர்கள் தன்னையன்றி வேறு ஒரு பொருளுமில்லை, எல்லாம் தன்மயமே எனத் தெளிந்து பேரானந்தத்தில் திளைத்தனர். மௌன மொழியில் உதயமானதுதான் தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம்.

அன்று மௌனமாக உணர்த்தப்பட்டதை இன்று சங்கரர் தொகுத்துச் சொல்ல வேண்டுமென்றால் தட்சிணாமூர்த்தியே சங்கரராக வந்திருக்க வேண்டும். இதையே பகவான் ரமணர், 'அச்சங்கரன்' என்கிறார். "அந்தச் சங்கரனே இன்று தம்முள்ளும் இருந்து இசைப்ப"தாகக் கூறுகிறார். குருபரம்பரை தட்சிணாமூர்த்தியில் தொடங்கி சங்கரர் வழியாக ரமணரில் முடிகிறது என்பதுதான் உண்மை.

தென்முகமாக அமர்ந்ததால் தென்முகக் கடவுளாக அறியப் படுகிறார் தட்சிணாமூர்த்தி. பகவான் ரமணரும் பெரும்பாலும் தென்முகமாகவே அமர்ந்திருப்பார். பெரும்பாலான கேள்விகளுக்கு மௌனமே அவரது பதிலாக இருந்துள்ளது. கருணைமிக்க அவரது கண்கள் காண்போரையெல்லாம் சாந்தப்படுத்தி அமைதியின் ஆழத்திற்கே எடுத்துச் சென்றது. மௌனத்தின் உருவகமே பகவான் ரமணர். காவி உடுத்தாமல், கானகம் செல்லாமல், சந்நியாசம் ஏற்காமல் துறவு வாழ்க்கை வாழ்ந்து காட்டியவர் பகவான்.

மௌன மொழியில் வெளிப்பட்ட தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தை சங்கரர் தொகுத்து சொற்களாக்கியதை பகவான் ரமணர் தமிழாக்கம் செய்தார். ஏக நிலையில் வேறுபாட்டிற்கு இடமேது. தட்சிணாமூர்த்தி, சங்கரர், ரமணர் என்பதெல்லாம் ஒன்றின் வேறு பெயர்களே.

தன்மய நிலையை உணர்வதற்குத் தடையாக உள்ள உலகு, காண்பான், காட்சி, காட்டும் ஒளி, விரிந்து ஒடுங்கும் சக்தி என அனைத்தும் தன்னையன்றி வேறு இல்லை. சர்வம் ஆத்ம மயம் என்பதைப் பத்துப் பாடல்களில் ஸ்தோத்திரமாகச் சொல்கிறார். இதிலுள்ள பத்துப் பாடல்களில் முதல் மூன்று பாடல்கள் உலகைப் பற்றியும், அடுத்த மூன்று பாடல்கள் காண்பானையும், அடுத்த மூன்று பாடல்கள் காட்டும் ஒளியையும் இறுதிப்பாடல் சர்வாத்ம தத்துவத்தையும் விளக்குகிறது. தொடர்ந்து பாடல்களையும் விளக்கத்தையும் காண்போம்.

**மங்கலப் பாடல்:**

*மன்னும் மாமுனிவர் சாந்தி மன்னவே*
*தென்முக மூர்த்தியாய் திகழ்ந்து மோனமாம்*
*தன்னிலை நிகழ்த்தி இத்துதியில் தன்மயஞ்*
*சொன்ன அச்சங்கரன் துன்னும் என்னுளே.*

சாந்தி பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு வைராக்கியத்துடன் வந்த மிகச்சிறந்த தவ சீலர்களான சனகர், சனந்தனர், சனத்சுஜாதர், சனத்குமாரர் ஆகிய நால்வருக்கும் அமைதி வந்தமைய தென்முகக் கடவுளாய் வந்து மௌனமே தன்னிலை என மௌனமாகத் திகழ்ந்த தட்சிணாமூர்த்தியை தன்மயமாய் இருந்து துதித்த சங்கர ஜகத் குருவே என்னுள்ளும் விளங்குகிறார்.

தவ சீலர்களாக இருந்தாலும் மன ஓசை அடங்காதவரை அமைதியில்லை. எண்ணங்கள் உள்ளவரை சொற்களின் கூக்குரல் இருக்கும். மனம் உள்ளவரை நினைவும், எண்ணமும், சொல்லும் இருக்கும். இதுவே மன ஓசை. இந்த ஓசை அடங்கினால் தான் அமைதி வரும். சொல்லற்ற நிலையே அமைதி. அமைதியே மௌனம். மௌனமே தன்னிலை. எண்ணம், சொல், செயலால் பந்தப்படாத நிலையே மௌனம். இதையே பேசா மெய்ஞ்ஞானம் என்கிறார் பத்ரகிரியார். அலையே நீரைக் கலக்கி அடியிலுள்ளதைக் காணவிடாமல் தடுக்கிறது. அலை அடங்கிய தெளிந்த நிலையில் நீர் தெளிவாக உள்ளபொழுது அடியிலுள்ளது காட்சியாகிறது. அதுபோல சொற்களாலேயே மனம் கலங்கியுள்ளது. மனம் தெளிவாவதே மௌனம். கலங்கிய நிலையில் கலக்கமுற்றிருந்த மனம் தெளிந்த நிலையில் தெளிவடைகிறது.

"சொற்களின் கூட்டம் ஒரு பெரிய காடு போன்றது. மனதை மயக்குவதற்குக் காரணமாகிறது" என்கிறார் சங்கரர். மனமயக்கம் போக சொற்கள் போக வேண்டும்.

"பிரம்ம தரிசனம் பெறாத நிலையில்தான் பேச்சும், ஆராய்ச்சியும். தரிசனம் கிடைத்தவுடன் மௌனமாகி விடுகிறான்" என்கிறார் பகவான் இராமகிருஷ்ணர். "மனமற்ற நிலையே சுக சொரூபம்" என்கிறார் பகவான் ரமணர். "மௌனமே சுக சொரூபம். "நினைவற்ற நிலையே சிவம்" என்கிறார் தாயுமானவர். நினைவே சொற்களைத் தூண்டுகிறது. நினைவு அகன்றால் சொல்லற்று மௌனம் வரும். அந்த மௌனம் அந்த ஏகாந்தம் உள்ளமெல்லாம் ஊடுருவி, தடைகளையெல்லாம் தகர்த்து, தன்னில், தானாகி ஆனந்தக் கழிப்பில் ஆழ்த்தும். புறம் அகன்றபொழுது அகம் ஆனந்தத்தில் ஆழ்ந்தது. களிப்பூறி, களிப்பூறி ஆனந்தத்தில் திளைத்து ஆனந்தமே ஆகி நிலை பெறுவதே தன்னிலை. மௌனத்திற்கு மொழியில்லை. அதனால் அது வார்த்தைக்கு வசமாவதில்லை. அது வார்த்தைகள் அற்ற மொழி. வார்த்தைகளை விடும்பொழுதே மனம் மௌனமாகிறது. மௌனம் மட்டுமே மனித உயிர்களையும் கடந்து எல்லா உயிர்களுக்கும் உணர்த்தும் வலிமையுடையது. மௌனம் என்பது இடையறாதப் பேச்சு, வாய்மொழிப் பேச்சு அதில் இடையூறு" என்பார் பகவான்.

ஞானத்தின் முடிவே மௌனம். உள்ளம் அமைதியடைந்து தன்னில் இருப்பதே மௌனம். மௌனம் நிலை பெறுவதே சகஜ சமாதி. மௌனம், ஆனந்தம், ஆத்மா பிரம்மம் ஆகியவைகள் தன்னைக் குறிக்கும் வேறு சொற்களே. மௌனமே தன்னிலை. தன்மயமானவன் தன்னிலையை வார்த்தைகளால் விளக்க முடியுமோ? வார்த்தைகள் அறிந்திராத மௌனத்தை மௌனமாய் இருந்து உணர்த்தியது போல, தானாயிருந்து தன்னை அறிவித்ததையே தன்மயம் சொன்ன சங்கரன் என்கிறார் பகவான்.

**பாடல் 1:**

*மவுனமாம் உரையால் காட்டும் அப்பிரம வத்துவாலன்*
*சிவ நிலைத்தவர் சற்சீடர் செறி குருவரன் சிற்கையன்*
*உவகையோர் உருவன் தன்னுள் உவப்பன் களிமுகத்தன்*
*அவனையாம் தென்பான் மூர்த்தி அப்பனை ஏத்துவோமே.*

சிவத்தை அறியும் தவத்தில் வைராக்கியத்துடன் நிலைத்து நின்ற சீடர்களுக்கு சின்முத்திரையில் மௌனமாயிருந்து பிரம்மத்தை உணர்த்திய சிறந்த இளம் பாலகுரு அவர். ஆனந்தமே உருவானவர். அகக்களிப்பில் திளைத்தவர். களி முகமாயிருந்தவர். அந்தத் தென்முக மூர்த்தியான பரமபிதாவைப் போற்றி வழிபடுவோம்.

“ஆன்மீகத்தேடலில் விவேகமும், வைராக்கியமும், ஒரு பறவையின் இரண்டு இறக்கைகள் போன்றது. ஒன்றிருந்து ஒன்று இல்லையென்றால் பயனில்லை” என்பார் சங்கரர். விவேகம் என்பது தெளிவு. தெளிவு இல்லாத தேடல் பயனற்றது. வைராக்கியமில்லாத தேடல் இலக்கை அடையாது. நால்வரும் தேடலில் தெளிவும், உறுதியும் உள்ள சிறந்த தவசீலர்கள். அவர்களது அக்கறையும், ஆர்வமும் சிவபரம் பொருளையே ஈர்த்தது. அவர்களது தேடலுக்கான ஒளி விளக்கே தென்முகக் கடவுள். சிவபரம்பொருளே இளங்குமரனாக ஆலமரத்தடியில் சின்முத்திரையில் மௌனமாக அமர்ந்திருந்தார். மௌனத்தின் வீரியம் நால்வரையும் ஈர்த்தது. வந்தமர்ந்தனர். கேள்வியும், அறிவு புகட்டலும் அங்கில்லை. மௌனம், மௌனம் மட்டுமே. இதையே பட்டினத்தார் “சொல்லுக் கடங்கான், சொல்லிறந்து நின்றவன் காண்” என்கிறார்.

நினைவும் சொல்லும் இணைபிரியா இரட்டையர்கள். நினைவின்றி சொல்லில்லை. நினைவு அகன்றால் சொல்லற்று மௌனம் வரும்.

*நினைவை நீக்கி நோக்கினால் சொரூபம் தோன்றும்*
*நினைவோடு நோக்கினால் உலகம் தோன்றும்*

என்கிறது நிஜானந்தபோதம். நினைவு உள்ளவரை உலகம் இருக்கும். நினைவு அகலும் பொழுது சொல்லற்று மௌனம் வரும். மௌனமே சொரூபநிலை. இதையே பகவான் ரமணர் "வெறு வெளி வீட்டில் ரமித்திடுவோம் வா அருணாசலா", என்கிறார். வெறு வெளி வீடு என்பது உலகமற்ற ஏகாந்தநிலை. புறம் அகலும் பொழுது இயல்பான அமைதியும், ஆனந்தமும் உணர்வாகும். மௌனமே ஆனந்தம். ஆனந்தமே தன்னிலை, தன்னிலையே ஆத்மா, ஆத்மாவே பிரம்மம். "சுயம் ஆத்மா பிரம்மம்" என்கிறது மாண்டுக்ய உபநிடதம். "எந்த வழியாலும் கண்டு கொளற்கு அரிதாய சுத்த மௌன வெளி ஊடிருந்து வயங்கும் தேவே" என்கிறார் வள்ளல் பெருமான். "பரப்பிரம்மமே ஆன்மா, ஆன்மாவே பரப்பிரமம், அதுவே நான் எனத்திடமாய் அறிவாய்" என்கிறார் ரிபு முனிவர்.

"எண்ணங்களின் துணையைக் கொண்டு யாரும் மௌனத்தை அடைய முடியாது. மனத்தளவில் அனைத்திலிருந்தும் முழுமையாக விலகி இருக்கும் நிலைதான் ஏகாந்தம். அந்த ஏகாந்த நிலையில் மௌனம் தானாகவே உங்களை முழுமையாக ஆட்கொள்ளும். மௌனம் பரமானந்தைத் தருகிறது" என்கிறார் ஜே.கிருஷ்ணமூர்த்தி. மௌனம் மட்டுமே தன்னை உணர்த்தும் என்பதையே சின் முத்திரையில் மௌனமாயிருந்து உணர்த்துகிறார். சின் முத்திரை, சிவனும் ஜீவனும் ஒன்றே என விளக்குகிறது. மும்மலங்கள் நீங்கினால்தான் ஒன்றான நிலை உருவாகும். நீங்கியுள்ள மூன்று விரல்களும் நீக்கப் பட வேண்டிய ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களைக் குறிக்கிறது. இணைந்துள்ள ஆள்காட்டி விரலும், பெருவிரலும் ஜீவனும், பிரம்மமும்

ஒன்றே என்பதை உணர்த்துகிறது. மௌனத்தின் மூலம் இதை உணர்த்திய அந்தத் தென்முக மூர்த்தியான பரம்பொருளை வாழ்த்தி வழிபடுவோம்.

**பாடல் 2:**

*உலகு கண்ணாடி ஊர்நேர் உறத்தனுள் அஞ்ஞானத்தால்*
*வெளியினில் துயில் கனாப்போல் விளங்கிடக் கண்டு ஞான*
*நிலையுறு நேரம் தன்னை ஒருவனாய் எவன் நேர் காண்பன்*
*தலையுறு குருவாம் அந்த தட்சிணாமூர்த்தி போற்றி.*

உலகம் கண்ணாடியில் காணப்படும் நகரம் போன்று, உள்பிரதிபலிப்புதான். கனவு காண்பவன்போல் தனது அறியாமையால் உலகு வெளியிலிருப்பதாக எண்ணுகிறான். குருவருளால் ஞானத்தில் நிலை பெறும் பொழுது ஒருவனாம் தன்னை அறிகிறான். இரண்டற்ற ஒருவன் தன்னை நேர்காண முடியுமோ? ஆதி குருவாம் அந்தத் தென்முகக் கடவுளுக்கு வணக்கம்.

உலகம் கண்ணாடியின் பிரதிபலிப்பு போன்றது என்கிறார். கண்ணாடி தன்முன் எது உள்ளதோ அதைத்தான் பிரதிபலிக்கும். அதுபோல உள்ளே உள்ள உலகை மனமும், புத்தியுமே பிரதிபலிக்கிறது. பேரம்பலத்தில் உள்ளதெல்லாம், சிற்றம்பலத்திலும் உள்ளது. சிற்றம்பலம் என்பது இதய வெளி. இது தஹராகாசம் என்றும் அழைக்கப்படுகிறது. “சிற்றம்பலத்தில் உலகனைத்தையும் காணலாம். வானுலகையும், பூவுலகையும் இதில் காணலாம். அக்னியும், வாயுவும், சூரியனும், சந்திரனும், மின்னலும், நட்சத்திரங்களும் இன்னும் இங்கு உள்ளதும், இல்லாததும், இதனுள் அடங்கும்” என்கிறது சாந்தோக்ய உபநிடதம்.

*அண்டத்திலும் இந்த வாறென்று அறிந்திடு*
*பிண்டத்திலும் அதுவே பேசு*

என்கிறது ஔவைக்குறள்.

வெளியில் தெரிகிற அனைத்தும் உள்ளேயும் உள்ளது என்பது உறுதியாகிறது. பிண்டமும், அண்டமும் ஒரே அமைப்பில் உள்ளது என்கிறார் விவேகானந்தர். “வெளியில் தெரிவது உள் உள்ளதின் பிரதிபலிப்பு” என்கிறார் சங்கரர்.

கனவு காண்பவன், கனவு உள்ளவரை, காணும் காட்சி தனக்கு வெளியே இருப்பதாகவே எண்ணுகிறான். கனவு உள்ளவரை காட்சிகளும் உண்மையாகவே தோன்றும். கனவிலிருந்து விடுபடும்பொழுது அது காட்சி மட்டுமே. வெளியில் எதுவும் இல்லை என்பதை உணர்கிறான். விழித்தவுடன் காட்சிகள் எங்கே சென்றன. கனவு தன்னிலேயே தோன்றி தன்னிலேயே மறைகிறது. அதுபோல அறியாமையிலிருப்பவன் உலகு தனக்கு அந்நியமாக வெளியிலிருப்பதாக எண்ணுகிறான். “மனத்தை அன்றி உலகு உண்டோ” என்கிறார் பகவான். மனமே கண்ணாடியாக இருந்து உள் உள்ளதைப் பிரதிபலிக்கிறது. மேலும் “உடலின்றி உலகைக் கண்டார் உண்டோ” என்றும் கேட்கிறார் பகவான். காண்பவனும், காட்சிப்படுத்துபவனும் உடலில் இருப்பதால் உடலின்றி உலகைக் காண்பார் யாருமில்லை. கனவு உள்ளவரை காட்சிகளும் இருக்கும். அதுபோல உலகு உண்மை என்கிற அறியாமை உள்ளவரை உலகும் இருக்கும். அறியாமையிலிருந்து விடுபடும்பொழுது கனவுக் காட்சிகள் கலைந்ததுபோல, உலகக் காட்சிகளும் இல்லாமல் போகும்.

கண்ணாடி உள்ளவரைதான் பிரதிபலிப்பும் இருக்கும். கண்ணாடி இல்லையென்றால் பிம்பம் மட்டுமே இருக்கும். அதுபோல உலகைப் பிரதிபலிக்கிற மனமும் இல்லையென்றால் உலகக் காட்சிகளும் இருப்பதில்லை. தூக்க நிலையிலிருந்து விடுபட்டவுடன் கனவில் கண்டது காட்சிகள் மட்டுமே, வெளியில் எதுவுமில்லை என்று தெளிவு வருவதுபோல, குருவருளால் அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு தன்னை

அறியும்பொழுது தனக்கயலாய் எதுவுமில்லை என்ற தெளிவைப் பெறுகிறான். கனவுக்காட்சிகள் தன்னில் மறைந்ததுபோல உலகக்காட்சிகளும் தன்மயமாகும் பொழுது, காட்சிகள் இருப்பற்ற பொய்தான் என்ற தெளிவைப் பெறுகிறான்.

"கற்பனை வந்தவாறு காட்டினோம் காண்ப எல்லாம்
சொற்பனம் போலும் என்றே துணிந்தவன் ஞானி ஆவான்

என்கிறது கைவல்யம். தெளிந்தவனுக்கு உலகம் கற்பனைதான். தானும், தனக்கு உபதேசித்த குருவும், உலகும் ஒன்றே என்ற அனுபூதி வந்தமைகிறது. காணும் பொருளில் எல்லாம் தன்னையே காண்கிறான். "காணப்படும் உலகனைத்தும் காண்பானாம் தனக்குள் அடக்கம். தனக்கயலாய் உலகிற்கு தனி இருப்பு ஏதுமில்லை" என்கிறார் பகவான்.

உண்மை உணர்வானபின் தன் நிலையை கிருஷ்ணமூர்த்தி விளக்குகிறார்.

"அப்போது நான் கிட்டத்தட்ட உணர்வற்ற நிலையில் இருந்தேன். இருந்தாலும் என்னைச் சுற்றி நிகழ்ந்து கொண்டிருப்பவற்றை நன்றாக அறிந்தவனாக இருந்தேன். மிகவும் அசாதாரணமான அந்த அனுபவத்தை முதன்முதலாகப் பெற்றேன். ஒரு மனிதர் சாலையை செப்பனிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அந்த மனிதர் வேறு யாருமல்ல, நானேதான். அவர் கையில் பிடித்திருந்த கோடாரியும் நானேதான், அவர் உடைத்துக் கொண்டிருந்த கல்லும் நானேதான், அந்த மனிதரின் அருகிலிருந்த மரமும் நானே. ஒவ்வொன்றிலும் நானிருந்தேன். இன்னும் சரியாகச் சொன்னால் ஒவ்வொன்றும் என்னிலிருந்தன. உயிர் இயக்கம் உள்ளவை, அற்றவை என எல்லாமும் என்னிலிருந்தன", என்கிறார்.

இந்தச் செய்யுளின் கருத்திற்கு, கிருஷ்ணமூர்த்தியின் நிலை, வெளிப்பாடாக அமைந்துள்ளது என்பதுதான் உண்மை.

**அனுபவ பாடல்: 3**

*வித்துளே முளைபோல் முன்னும் விகற்பமில் இச்சகம் பின்*
*கற்பித மாயாதேய கால கர்மத்தால் பற்பல*
*சித்திரம் விரிப்பன் யாவன் சித்தனு(ம்) மாயிகன் போல்*
*சத்தியால் குருவாம் அந்தத் தட்சிணாமூர்த்தி போற்றி*

முளைப்பதற்கு முன்பு விதைக்குள்ளிருக்கும் முளையைப் போல் படைப்புக்கு முன்பு வேற்றுமையின்றி ஒடுங்கியிருந்த உலகத்தை பின் மாயையின் படைக்கும் சக்தியால் தேச, கால, கர்ம வசத்தால் சித்திரம் போல் பலப்பல உருவங்களை சித்தன் போலவும் உலகைத் தன் சக்தியால் எவன் வெளியில் விரிக்கின்றானோ அந்தத் தென்முகக் கடவுளுக்கு வணக்கம்.

வேராக, கிளைகளாக, இலைகளாக, பூவாக, காயாக, பழமாக உள்ள பெரிய மரம் மூடப்பட்ட விதைக்குள் ஒடுங்கியிருந்த வெளியில் மரமாகப் பரிணமித்தது. உள்ளதே உருவானது. அதுபோல படைப்புக்கு முன் உலகம் உள்ளதில் ஒடுங்கியிருந்தது. அப்பொழுது எந்தப் பேதமும், வேறுபாடும் காட்சியாகவில்லை. ஆனால் மாயையின் சக்தியால் காலதேசங்கள் உருவாகி, கர்ம வசத்தால் பல உருவங்களும் உருப்பெற்று உலகமாயின. படைப்புக்குமுன் பரம்பொருளில் எது ஒடுங்கியிருந்ததோ அதுவே படைப்புக்குப்பின் திரையில் சித்திரம்போல் பலவாறாக வெளியில் விரிக்கப்பட்டது. பரம்பொருள் வித்து, உலகம் மரம். பிரம்மத்தின் அசையும் பகுதியான சக்தியே மாயை. அதுவே ஜால வித்தைக்காரனைப் போல மாயங்கள் செய்து உலகைப் படைத்தது.

“உலகம் பொய், மாயை” என்ற சங்கரரின் இந்த வாதம் பலரின் விமர்சனத்திற்கும் மறுப்புக்கும் ஆளாகியுள்ளது. தாந்திரிகள், “உலகம் எந்தச் சக்தியிலிருந்து தோன்றியதோ அது சத்தியத்தின் பிரிக்க முடியாத பகுதி,

அதனால் உலகம் உண்மை” என்கிறார்கள். பகவான் சொல்கிறார், “இந்த மறுப்பாளர்கள் சங்கரரை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. சங்கரர், பிரம்மம் சத்யம், ஜகத் மித்யை, ஜகத் பிரம்மம் என்கிறார். இரண்டாவது வாக்கியத்துடன் நிறுத்தவில்லை. மூன்றாவதாக ஜகத் பிரம்மம் என்றும் சொல்கிறார். உலகைப் பிரம்மத்திலிருந்து வேறாய்ப் பார்க்கிறோம். அது தவறு என்கிறார். தாந்திரிகர்கள் உலகம் சத்யத்திலிருந்து வந்ததால் சத்யம் என்கிறார்கள். சங்கரர் பிரம்மம் என்கிறார். இரண்டும் ஒன்றுதான்.”

“உலகம் யாருக்குத் தோற்றமாகிறது. பார்க்கிற எனக்கு. பார்ப்பவன் இல்லையென்றால் உலகமுமில்லை. அதனால் பார்ப்பவனே சத்யம். தோற்றம் பிரம்ம சத்யம். பிரம்மத்திற்கு வேறான தோற்றம் பொய். ஒருதோற்றம் பிரயோஜனமாக இருப்பதாலேயே அது சத்யம் ஆகிவிடாது. கனவு நீர், கனவு தாகத்தைத் தீர்க்கும். ஆனால் விழிப்பில் அது பொய்யாகிவிடும். விழிப்பில் இருக்கிற பிரயோஜனம் மற்ற இரண்டு நிலையிலும் பொய்யாகிவிடும். எது இடைவிடாமல் இல்லையோ அது சத்தியமாகாது. சத்யம் எப்பொழுதும் சத்யமாக இருக்கவேண்டும். கொஞ்ச காலம் சத்யம், மற்ற நேரத்தில் அசத்யம் என்றால் பொருந்தாது. ஜாலவித்தைக்காரன் மாதிரிதான். உண்மை போலவே இருக்கும், ஆனால் பொய்தான். அப்படித்தான் உலகமும். அது ஆதார சத்யத்தை விட்டு விலகி வேறாக இல்லை,” என்கிறார் பகவான் ரமணர்.

மாயை உருவாக்கிய உலகமும் இருப்பற்ற மாயைதான். இருப்பற்றது எதுவும் உண்மையில்லை. புறப்பொருள்களையும் உருவ விஷயங்களையும் ஒதுக்கி நிலைத்த இருப்பான ஆன்மாவில் நிலை பெறும் பொழுது தோற்றங்கள் யாவும் பொய் என்பது உறுதியாகிறது.

*மாயை மறைக்க மறைந்த பொருள்*
*மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்*
*மாயை மறைய வல்லார்கட்குக்*
*காயமும் இல்லை கருத்தில்லை தானே*

*திருமந்திரம்-2548*

மாயத்திறை உள்ளவரை 'பொருள்' மறைந்தே இருக்கும். மாயத்திறை அகலும்பொழுது உள்ளது காட்சியாகும். மாயையிலிருந்து விடுபடும் வல்லமை உள்ளவர்களுக்கு மாயை உருவாக்கிய உடலும் இல்லை. உலகியலும் இல்லை.

எது அதன் பிரகாசத்தைப் பெற்றுத் தோன்றுகிறதோ அதுவே அதை மறைக்கிறது என்கிறார் சங்கரர் மனிஷா பஞ்சகத்தில். மேகம் சூரியனாலேயே உருவாகிறது. உருவான மேகம் சூரியனையே மறைக்கிறது. இருளும் வருகிறது. மேகத்தால் சூரியனை மறைக்க முடியுமோ? முடியாது. ஆனால் மேகத்தால் உருவான இருள் ஒளியைப் பார்க்க விடாமல் நம் கண்களை மறைக்கிறது. இருள் உள்ளவரை மறைப்பும் இருக்கும். மேகம் கலையும்பொழுது இருள் அகன்று சூரியனையும், சூரிய பிரகாசத்தையும் காண முடியும். இதையே திருமூலர் மாயை மறைக்க மறைந்த மறைபொருள் என்கிறார். மேகம் கலைவதுபோல அஞ்ஞான மாயை அகலும்பொழுது மறைபொருள் வெளிப்படும். இது மாயைதான் எனத் தெளியும் திறனாளர்களுக்கு உடலுமில்லை, உலகுமில்லை.

**உலகத் தோற்றம் பற்றி பகவானின் கருத்து:**

"சினிமாத்துறை ஜடமாதலால் அதன்மீது சித்திரங்களைத் தோற்றுவிக்க வெளியே ஒரு ஆளும், பிற உபகரணங்களும் வேண்டியிருக்கின்றன. ஆனால் இங்கே சொரூபமாம் திரை தனக்கு அயலேதுமற்ற பரிபூரணம். இன்னதென வரையறுத்துக் கூறமுடியாத ஓர் அதிவிசித்திரமான சக்தியால் தனக்குள்ளேயே



தனதியல்பில் எத்திரிபுமுறாது. காட்சிக்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் அவ்வற்புத சக்தியே. சினிமாக் காட்சி சுத்த வெளிச்சத்திலும் காணப்படாது, வெளிச்சமின்றி தனியிருளிலும் காணப்படாது. சூழ்ந்ததோர் இருளிடையே செலுத்தப்படும் ஓர் செயற்கைப் பிரகாசத்திலேயே அது தோன்ற முடியும். அவ்வாறே சுத்த ஆன்மப் பிரகாசத்தில் எதுவும் தோன்றாது. சுழுத்தியைப் போன்ற சுத்த அந்தகாரத்திலும் எதுவும் காணப்படாது. நிஜ சொரூபத்தை உணரா அஞ்ஞான அந்தகாரத்தினூடே தோற்றும் பிரதிபலிப்பு பிரகாசத்திலேயே திரிபுடித் தோற்றம் யாவும் நிகழும். சுத்த பிரகாசமாம் ஆத்மாவில் துவைதத் தோற்றம் எதற்கும் இடமில்லை. தன்னை உணரா அஞ்ஞானத்திலேயே துவைதம் எதுவும் தோன்றக் கூடும்."

"ஒருவன் என்னும் ஒருவன் காண்க விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க" என்கிறார் மணிவாசகர். ஒன்றே பலவாகத் தோன்றுகிறது. அஞ்ஞானம் அகன்றவன் தோன்றிய அனைத்திலும் ஒன்றையே காண்பான். "தன்னை அறியும்பொழுது நீயும் அதுதான்" என்கிறார் பகவான் ரமணர்.

*(வளரும்)*

# ரமண புராணம்

### ஆகுரா

### மதுரை, திருப்பெருந்துறை, தில்லை

ரமண புராணம், சிவபுராணத்தை ஒட்டியே வெளிப்பட்டு இருந்தாலும், ரமண புராணத்தில், மணிவாசகர், வந்தி, மார்க்கண்டேயன், கண்ணப்ப நாயனார் என்பதாக பரபத்தி தத்துவம் ஓங்கி ஒலிக்கிறது. இதில் முத்தாய்ப்பாக சிவபெருமானால் நந்தியம்பெருமான் மாணிக்கவாசகராகப் பிறவி எடுத்து பரபத்தி தத்துவம் விளங்க வாழ்ந்து காட்டிய வரலாறு அதிகம் இடம் பிடிக்கிறது. சிவனும் ரமணனும் வேறு வேறு அல்ல, என்பதாக இருவரின் புராணங்களும் அதாவது இயல்பும் ஒன்றே என்ற தத்துவம் நீக்கமற *ரமண புராணம்* முழுவதும் நிறைந்துள்ளது. ஆரம்பத்திலேயே ஐம்பது வரிகளுக்கு மேல் மணிவாசகர் சரிதம் வளர்த்தெடுக்கப் பட்டுள்ளது. முடிந்தவரை ரமண புராண வரிகளின் பொருள் கூறுவதின் ஊடாக அவ்வப்பொழுது மாணிக்கவாசகரின் சரிதமும் விளக்கப்படுகிறது.

மாணிக்கவாசகர், பாண்டிய நாட்டில், வாதவூர் என்னும் கிராமத்தில் சம்புபாத சரிதருக்கும், சிவஞானவதிக்கும் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் ‘திருவாதவூரர்’. மாணிக்கவாசகர் சிறுவயதுமுதலே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதுடன் மனித நேயம், சிவபக்தி எனும் சிறந்த குணங்கள் கொண்டவராய் வளர்ந்துவந்தார்.

அக்காலத்தில் அரிமர்த்தன பாண்டியன் மதுரையை இருப்பிடமாகக் கொண்டு ஆண்டுவந்தார். இவரின் திறமைகளால் ஈர்க்கப்பட்டு அரிமர்த்தன பாண்டியன்

இவரைத் தனது முதல் மந்திரியாக்கிக் கொண்டார். உயர்ந்த பதவி, செல்வம், செல்வாக்கு எல்லாம் இருந்தபோதும் அவை வாழ்வின் நோக்கமல்ல என்பதை உணர்ந்த திருவாதவூரார் சிவ வழிபாடு மேற்கொண்டு ஒழுகி வரலானார். ஞான நாட்டம் மிக்கவராக வாழ்ந்த இவருக்கு ஒரு குரு வேண்டும் என்ற வேட்கை உள்ளுக்குள் இருந்துகொண்டே இருந்தது. சிவபெருமான் தனது ஆணையினால் பரபத்தி என்பது என்ன என்பதைப் பக்குவிகளுக்கு பயின்று ஒழுகிக் காட்ட வேண்டி நந்தீசனை மாணிக்கவாசகராக உலகுக்கு அனுப்பிவைத்தனர். இத்தகைய ஞானப் பிறப்புகள் இறைவனால் தோற்றுவிக்கப் படுதல் என்பது உயிர்கள் மாட்டு இறைவனின் அன்பினால் விளையும் தொடர் நிகழ்வுகள். இதனை உழுவல் அன்பு, தொடர் நிகழ்வு என சான்றோர்கள் வரையறுத்துக் கூறுகிறார்கள். இந்த உழுவல் அன்பானது மணிவாசகரின் உள்ளத்தே 'மூண்ட அழல் போன்று முறுகலால்' என்று ரமண புராண வரிகள் விவரிக்கிறது

*.................பேதமறு*
*நேசம் பயில் சகஜ நிஷ்டன் குடமுழ நந்தீசனே*
*வாசகனாய் ஏய்ந்தது கொண்டு அவ்வுழுவல்... (20)*

*மூண்ட அழல் போன்று முறுகலான் முத்தி நெறிக்கு (21)*

*ஆண்ட கழல் அன்றி அறியாப் பரவசத்தில்*
*சந்த நடை சான்ற தமிழ்நாடன் வாசி தரத்*
*தந்த நிதித்திரளின் தன்ம விசேடத்தால்*
*குருமூர்த்தமாகக் குலவிய தன் கோயில்*
*பரமார்த்தம் என்ற அப்பணியில் செலவிடவே*

இந்த உழுவல் அன்பானது மணிவாசகரின் உள்ளத்தே "மூண்ட அழல் போன்று முறுகலால்" என்று ரமண புராண வரிகள் விவரிக்கிறது.

இங்கு அழல் தானாக மூண்டது. மூட்டப்படவில்லை. அதுவும் இளவேனில் அன்பாக அப்பொழுதே மூண்ட அக்னி ஜுவாலை. சுட்டு எரிக்காது வெளிச்சம் போட்டுக் காட்டும் முறுகல் தன்மை கொண்டது. இந்த அழல் இங்கு பரபத்தி எனும் தீ. "தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா" என்ற பாரதியின் தீ. அழல் என்பது நெருப்புதான். ஆனால் அது சிவபெருமானின் உள்ளங்கை தாங்கி சுடர்விடும் அழல். அக்னி பலவாறாகப் பயன்படுத்தப் படுகிறது.

ரமண புராணத்திலேயே, "முத்தாபத் தழற் கொழுந்து வீசாது" என்பதாக பயன்படுத்தப் படுகிறது. இங்கு அது சுடும் எரிக்கும் அக்னி. சிவனின் நெற்றிக்கண்ணைப் போன்ற சுட்டெரிக்கும் தன்மையது.

அழல்=சிவபெருமானின் கை விரல்கள் தாங்கும் அன்பாகிய தீ; கழல்=திருவடி; சந்தம்=அழகு; தமிழ்நாடன்=தமிழ் நாட்டு அரசன்; வாசி=குதிரை; தன்ம விசேடத்தால்=தர்ம விசேஷத்தால்; குலவி=நெருங்கிய உறவாடி; பரமார்த்தம்=தெய்வீக

தனது ஞான வழிக்குத் தன்னை ஆண்ட சிவபெருமானின் திருவடி ஒன்றே அன்றி வேறு ஒன்றும் அறியாதவர் மாணிக்கவாசகர்.

அந்த ஏக வழி சிந்தனையின் பரவசத்தில் திளைக்கும் மணிவாசகர், சந்த நடை நயம் கொண்ட தமிழ் நாட்டு அரசனாகிய அரிமர்த்தன பாண்டியன், முதன் மந்திரியாகிய மாணிக்கவாசகரிடம் குதிரைகள் வாங்கி வர நிதித்திரள் கொடுக்கிறார்.

அந்த நிதி தர்ம வழியில் வந்தது. அதனால் அந்த நிதி குதிரை வாங்கக் கொடுக்கப் பட்டது என்றாலும், மாணிக்கவாசகரால் தன்னை ஆட்கொண்டு மகிழ்வித்த

இறைவனுக்கு கோயில் எழுப்பும் திருப்பணியில் செலவிடப்பட்டு விடுகிறது

*கிங்கரரால் வேந்து அழைக்கக் கேட்டு மதி மாழ்கலால்*
*சங்கரனாம் தன் அடியிற் சார்ந்து குறை சாற்ற*
*விலைமதிக்க லாகா விரிசுடர் மாணிக்கம்*
*சலமனத்தன் கண்டு மகிழ் சார முதலுய்த்து*

*நரித்திரளை நாமப் பரியாக்கிக் கொண்ட அவ்*
*அரிமர்த்தனன் செய் அருந்தவத்தால் கண்முன்*
*மரகத மாணிக்கம் மயங்கு எழிலோடு அஞ்சொற்*
*துரகதமா வூர்ந்து அரசன் சோத்த மகிழ்ந்து ஏற்று அருளிக்*
*கொள்ளுக எனத் தான் கயிறு மாறிக் கொடுத்தலும் அந்த*
*நள்ளிரவே முன்னை நரிகளாய அப்பரிதாம்*
*ஊரை அவலமுறுத்து ஊளையிட்டுக் கொண்டு ஓட*
*யாரை நீர் மாயம் செய்தீர் என்று அடிகளை வேந்து*
*உள்ளம் காய்ந்து ஆற்ற ஒறுத்தலுமே வையைக் கண்*
*வெள்ளம் பாய்ந்து ஊர் மேல் விரைவதனைத் தட்க*

*அடியார் இரந்த குறை ஆண்டானாம் தன் பொன்*
*முடியால் நிறைவேற்றும் மோத தயாமூர்த்தி*

*கிங்கரரால்=ஏவலர்களால்; வேந்து=வேந்தன்; மதி மாழ்கல்=மதி மயங்குதல்; விரி சுடர் மாணிக்கம்=சுடர் ஒளி வீசும் மாணிக்கம்; சல மனத்தன்=சலன மனம் கொண்டவன்; மகிழ் சார=மகிழ்ச்சி கொண்டு; முதல் உய்த்து=முதல் இட்ட பொருள் பிழைத்தது; நாமப் பரி=உயர் வகை குதிரை; குதிரை குதித்து ஓடுவதால் குதிரை என்றும், பரிந்து (வேகமாக) ஓடுவதால் பரி என்றும் அழைக்கப்படுகிறது. துரகதம்=ஓட்டப்படும், செலுத்தப்படும் குதிரை; அஞ்சொல் துரகதம்=பஞ்ச கல்யாணிக் குதிரை; சோத்தம்=தலை வணங்கும் தாழ்மை, ஸ்தோத்திரம்; அவலமுறுத்து=அலங்கோலம், துன்பத்தில் ஆழ்த்தி; காய்தல்=வெறுப்பு; ஒறுத்தல்= தண்டித்தல்; ஆற்ற=மிக; விரைவதனை தட்க=விரைந்து வருவதைத் தடுக்க*

இரந்த குறை=இறைஞ்சி வேண்டிய குறை; தன் பொன் முடியால்=இறைவன் தனது தலையாய காரியமாகக் கொண்டு

வேந்தன் தனது ஏவலர்களை அனுப்பி மணிவாசகரை மதுரைக்கு அழைத்து வரச்செய்கிறார். குதிரை வாங்கத் தந்த பணம் கோவில் திருப்பணிக்கு செலவிட்டது நினைவில் வர மாணிக்கவாசகர் மன்னருக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாது மனம் கலங்கி, இறைவனான சங்கரனிடம் தன் குறையை முறையிடுகிறார். சிவபிரான் விலைமதிக்க முடியாத ஒளி மிகுந்த மாணிக்க மணியை மாணிக்கவாசகரிடம் தந்து, அரசனிடம் கொடுக்கச் செய்கிறார். கோபத்தினால் வெகுண்டிருந்த அரசன் மாணிக்க மணியைக் கண்டதும், தான் தந்த பொற்குவியலின் மதிப்பிற்கும் பலமடங்கு மேலாய மாணிக்கம் கிடைத்ததால் அகம் மிக மகிழ்ந்தான். மாணிக்கவாசகரை குதிரைகள் மதுரை வந்து சேரும் என்று அரசனிடம் வாக்களிக்க சிவபெருமான் கூறினார். அதனை நிறைவேற்றும் பொருட்டு, நரிகளை நல்ல உயர்ஜாதி பரிகளாக மாற்றிக்கொண்டு ஒளி பொருந்திய மரகத மாணிக்கமும் மங்கும்படியான எழிலுடன், பஞ்ச கல்யாணி என்னும் தெய்வீகக் குதிரையில் ஊர்ந்த வண்ணம் அரசன் முன் வந்தார். அரிமர்த்தனன் செய்த அருந்தவத்தால் அன்றி இக்காட்சி கிடைக்கப் பெறாது என்ற நிலையில் அரசன் தாழ்மையுடன் தலைவணங்கி நிற்க, அதை மகிழ்ந்தேற்ற இறைவன் குதிரைகளை ஏற்றுக் கொள்ளுமாறு அரசனிடம் கயிறு மாறிக் கொடுத்தான்.

இறைவன் கொடுத்த அன்றைய நள்ளிரவே அந்தக் குதிரைகள் எல்லாம் முன்போலவே நரிகளாகி, ஊரையெல்லாம் அலங்கோலமாக்கி ஊளையிட்டுக் கொண்டு ஓடிவிட்டன. இதையறிந்த வேந்தன் மாணிக்கவாசகர்பால் அடங்காக் கோபம்

கொண்டு மனம் வெறுப்புற்று, "யாரை நீர் மோசம் செய்தீர்?" என்று அடிகளை மிகுந்த தண்டனைக்கு உள்ளாக்குகிறான் (காய்ந்த வைகை ஆற்றின் கொதிக்கும் மணல் பரப்பில் நிற்க வைக்கிறான்). அடியார் துன்புறுத்தப் படுவதைத் தாங்காத இறைவன் வைகையில் வெள்ளம் பாய வைத்து ஊர் மேல் புக வைக்கிறான்.

வெள்ளம் ஊர்மேல் விரைந்து புகுவதைத் தடுக்க வீட்டுக்கு ஒரு ஆள் வீதம் சென்று கரை அடைக்க அரசன் கட்டளை இடுகிறான். இங்கு ஒரு தகவல் கூறத்தக்கது. ஆவுடையார் கோவிலிலே தாவும்பரி என்று ஒரு குதிரை கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. அந்தக் குதிரை மீது சிவபெருமான் அமர்ந்து வருவதுபோல செதுக்கப்பட்டுள்ளது. நரியைப் பரியாக்கியது இந்த ஆவுடையார்கோவில் புராணத்தின் பெருமையாகும். குதிரையின் அமைப்பு ஒவ்வொன்றாய்ப் பார்த்தால் உயிர்க் குதிரையோ என்று தோன்றும். குதிரைகளில் சிறந்ததும் அழகு வாய்ந்ததும் பஞ்ச கல்யாணிக் குதிரையாகும். பஞ்ச கல்யாணி என்றால் அந்தக் குதிரையின் நான்கு கால்களிலும் அதன் கணுக்காலில் வெள்ளை நிறம் இருக்கும். நெற்றியிலும் பொட்டு வைத்தாற் போல வெள்ளை நிறம் இருக்கும். இவ்வாறு ஐந்து இடத்தில் வெள்ளை நிறம் இருக்கும் குதிரை பஞ்ச கல்யாணிக் குதிரையாகும். சிவபெருமானைத் தாங்கி நிற்கின்ற இங்குள்ள குதிரை சிலையில் மேற்சொன்ன ஐந்து இடங்களில் வெள்ளை நிறம் இருக்கின்றன. அது மட்டுமல்ல அந்தக் குதிரையின் பற்களும் வெண்மையான கற்களால் செதுக்கப்பட்டுள்ளது.

அனனியமாத் தன்னை அடைந்த சரணத்தால்
கன நியமச் சான்றோரும் கண்டு தொழத்தக்காள்
முதுவந்திக்கு ஆளாய் முயன்று முடிமேலே
மதுவந்த பிட்டுக்கு மண் சுமக்கலுற்றுப்

*பிரம்படிதான் உண்ட விசித்திரத்தால் தானே*
*வரம்பிலவாம் எட்டு வடிவாதல் காட்டி*
*அமைச்சர் பெருமை அரசர்க்கு உணர்த்தித்*
*தமைச் சிவவாழ்க்கைக்கே சரிக்க விடுத்து அப்பால் (50)*
*அழகுமலி தில்லை பொன்னம்பலம் சார்க என்னத்*
*தழுவு சிவா ஞானத் தபோதனரை ஏவி*

சிவபெருமான் மேல் அனனிய பக்தியுடன் சரண் அடைந்த, சீலம் மிகுந்த நியமத்துடன் கூடிய, சிறந்த அறிஞரும் கண்டு வணங்கத்தக்க பிட்டு விற்றுப் பிழைக்கும் வந்தி என்னும் மூதாட்டிக்கு அரசு ஆணையின்படி கரை அடைக்கும் பங்காற்ற இயலாமை ஏற்படுகிறது.

அடியார் இறைஞ்சும் குறையைத் தன் பொன் முடி மேல் தலையாய கடமையாய் ஏற்று நிறைவேற்றுவதில் மகிழ்ச்சி கொள்ளும் கருணை மிகுந்தவன் இறைவன் வந்தியின் வேதனையைப் போக்கும் வண்ணம் தேன் கலந்த பிட்டை கூலியாகப் பெற்று மூதாட்டிக்கு கூலியாளாக முயன்று (சோம்பலுடன், விளையாட்டாக), முடிமேல் மண் சுமக்கலுற்றார். இவரின் போக்கைக் கண்ட அரசன் பிரம்பால் இவரை முதுகில் அடிக்க, அந்த அடி அரசனையும் உள்ளடக்கி அனைவரையும் தாக்கிய விசித்திரம் நடந்தது. கூலியாளாக வந்த சிவபெருமான் அனைவர்க்கும் தனது எண் வடிவங்களைக் காட்டி, அமைச்சராகிய மணிவாசகரின் பெருமையை அரசனுக்கு உணர்த்தி, மாணிக்கவாசகரை சிவவாழ்க்கையில் ஈடுபடுத்திக் கொள்ளுக என்று அசரீரியாக ஆணையிட்டார். இறுதியில் அழகு மிகு தில்லை பொன்னம்பலம் வந்து சேர்க என்று சிவஞானத்தைத் தழுவி வாழும் தபோதனரான மாணிக்கவாசகரை இறைவன் ஏவல் உற்றார்.

இங்குக் குறிப்பிடத்தக்கது யாதெனில், இந்த எட்டுக் குணங்களை உடையவன் தான் பரம்பொருள் என்பதைத்

திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் ஒன்பதாவது குறளில்,

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

என்று கூறினார். அதாவது கடவுளின் தாளை வணங்காத் தலை என்று மட்டும் கூறி விடாது எண்குணத்தான் தாளை வணங்காத் தலை என்று எண்குணங்களைக் காட்டிப் பரம்பொருளாகிய கடவுளை உணர்த்துகிறார்.

மனவாசகம் கடந்தும் மத்த மனப் பேயேன்
சொன வாசகம் விழைந்த சொக்கப் பெருமான்
இகலுறும் அஞ்ஞானம் அழிந்து இன்னருளால் எய்தும்
புகலறு மெய்ஞ்ஞானானுபூதி வடிவாகக்
குருவே எனத் தடுத்தாட்கொண்ட சிவம் தன்னோடு
இருவேறு அறக் கலந்த ஏற்றமிகும் அந்தத்
திருவாதவூரர் திருவாய் மலர்ந்த
திருவாசகமும் திருக்கோவையாரும்
உலகம் அறிந்து உய்ய உளங்கொண்டு தக்கு ஆங்கு
இலக வரைந்திட்ட எழிற்பொலங்கைச் சீர் வாழ்க (62)

மன வாசகம்=மனம், வாய்ச்சொல் மனம் வாசகம் மற்றும் உடல் என்பன முக்கரணங்கள் எனப்படும். இவற்றைக் கடந்து என்றால் அது ஆன்ம நிலையில் நிற்றல் என்பதாகும்.

மத்த மனப் பேயேன்=மத்தம் என்றால் பைத்தியம், பித்து என்பதாகும், உன்மத்தம் என்பது கடுமையான பித்து. மனப் பித்து பிடித்த பேயோன்; இகல்=பெரும் துன்பம்; உறுதல்=உண்டாதல், மிகுதல்; அஞ்ஞானம் =ஞானம் இன்மை; புகலறு=சொல்லற்கு அறிய, வார்த்தைகளால் விவரிக்க முடியாத; மெய்ஞ்ஞானம்= உள்ள பொருள், மெய் அறிவு, ஆன்ம நிலை; அனுபூதி= அனுபவ ஞானம், அனுபவ அறிவு; இலக, இலகுதல் =விளங்குதல்; எழிற் பொலங்கை=அங்கை, அழகிய கை, உள்ளங்கை என்று பொருள் படும்

தில்லை வந்தடைந்த மாணிக்கவாசகர் முன்பு வேதியர் வடிவில் வந்த சிவபெருமான், மாணிக்கவாசகர் பாட திருவாசகம் மற்றும் திருக்கோவையார் இரண்டையும் எழுதியது வரலாறு.

ரமண புராண வரிகள் இங்கு மாணிக்கவாசகரின் கூற்றாக அமைக்கப் பெற்றுள்ளது.

மனம் வாசகம் கடந்தவனாக இருந்தும், பித்து பிடித்த மனம் கொண்ட பேயோன் ஆகிய நான் சொன்ன வாசகத்தை கேட்க விரும்பினான் சொக்கநாதப் பெருமான். பெரும் துன்பம் உண்டாக்கக் கூடிய அறியாமை அழிந்து, அவன் இன்னருளால் அடையக் கூடியது சொல் எனும் எல்லைக்குள் அடங்காத மெய் ஞான அனுபூதி ஆகும். அந்த ஆன்ம அனுபூதியின்



வடிவமான குருவாக தடுத்து ஆட்கொண்ட சிவனுடன் இருவேறு அற, இரண்டற்ற தன்மையுடன் கலந்த மிகுந்த உயர்வினரான திருவாதவூரர், திருவாய் மலர, திருவாசகமும், திருக்கோவையாரும் உலகோர் அறிந்து உய்ய உளம் கொண்டு தக்க வண்ணம், விளக்கத்துடன் எழுதி அருளிய எழில் பொழியும் அழகிய திருக்கையின் சீர் வாழ்க!

*(சிதம்பரத்திலும் சிவபெருமான் மாணிக்கவாசகர் முன்னர் ஒரு வேதியர் போல வந்தார்.*

*"நான் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன். உமது புகழைக் கேட்டு நீர் பாடிய பதிகங்களைக் கேட்க வந்தேன்" என்று அந்தணர் கூறினார்.*

*மாணிக்கவாசகர் திருவாய் மலர அந்தணர் அனைத்து பதிகங்களையும் எழுதி முடித்தார். இறுதியில் திருச்சிற்றம்பலமுடையான் மீது ஒரு கோவைப் பிரபந்தம் பாட வேண்டும் என்று வேண்டினார். வாதவூரடிகள் அதையும் பாடி முடித்தார். முடித்ததும், ஓலைச்சுவடியின் முடிவில் "மாணிக்கவாசகன் சொற்படி அம்பலவாணன்" என்று கையொப்பமிட்டு திருமுறையை கோவில் திருவாயிற்படியில் வைத்து மறைந்தார். அடுத்த நாள் தில்லை அந்தணர் அவ்வேடுகளை எடுத்துப் பார்க்க, அது திருவாசகமும் திருக்கோவையாரும் கொண்ட சுவடியாக இருந்தது. மிகவும் மனம் மகிழ்ந்த அவர் தில்லை மூவாயிரவர் கூட்டிப் பூஜைகள் செய்தார். மூவாயிரவர் நடந்த நிகழ்ச்சிகளின் பொருள் என்ன என்று வாதவூராரைக் கேட்டனர். அவர்கள் அனைவரையும் திருச்சிற்றம்பலத்துக்கு அழைத்துச் சென்ற வாதவூரார் பொருள் இதுவே என்று கூறித் தில்லையம்பலத்தைக் காட்டி அம்பலத்தே கலந்தார்.)*

**இந்த எழுத்து தொடரும்**

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

**மௌனிசாது**
**மொழிமாற்றம்: ராம் மோஹன்**

## 32. சில ஞாபகங்கள்

*இன்றைய உச்சிவேளைக்கு முன் என்னுடன் பேசிக் கொண்டிருந்த மகரிஷி, 1947-ஆம் ஆண்டு கர்டிபா நகரிலிருந்து தனக்கு அனுப்பப்பட்ட பிரேசில் 'அருணாசலக் குழு' என்னும் புகைப்படத்தில் நான் இருப்பதை நினைவுகூர்ந்தார். 1948-ஆம் ஆண்டில் பதிக்கப்பெற்ற சிறு நூலைப் பற்றிக் குறிப்பிட்டு, "அந்த நூலை எழுதியது நான்தானா?" என்று வினவினார். அணுக்கத் தொண்டர் ஒருவரை அனுப்பி, ஆச்ரம நூலகத்தில் இருந்து அதைக் கொணர்ந்து வரச்சொல்லி, அதன் உள்ளடக்கத்தைக் குறித்து விசாரிக்கலானார். அங்கிருந்த சில அந்தணத் தொண்டர்கள் உதவியுடன் என்னால் இயன்றவரை அந்நூலின் உள்ளடக்கத்தை விளக்கினேன். பகவானிடம் அந்நூலை எழுதியது நான்தான் என்று கூறி, அதைப் பின்னர் போர்ச்சுகீசிய மொழியில் மொழிமாற்றம் செய்து பிரேசில் நாட்டில் பதிப்பித்தேன் என்றும் கூறினேன். அதன் மூலப் பிரதி முழுதும் என்னாலேயே தட்டச்சு செய்யப்பட்டது என்பதையும் எடுத்துரைத்தேன். பின்னர் நான் என் குடிலுக்குச் சென்று பகவானின் புகைப்படத்தை உள்ளடக்கிய அழகான கட்டமைப்பு செய்யப்பட்ட நூலைக் கொணர்ந்து காட்டி இந்த அழகிய நூலைத்தான் பிரேசிலின் 'அருணாசலக் குழு' பகவானுக்கு அர்ப்பணம் செய்துள்ளது என்றும் கூறினேன். எனக்குப் பெருவியப்புத் தரும் செயல் ஒன்றை பகவான் செய்யக் கண்டேன். பகவான் மெதுவாக அந்த நூலின் ஏறத்தாழ*

நூறு பக்கங்களை தான் முன்பின் அறியாத மொழியினை நேரடியாகப் படிப்பவர் போன்று தோன்றியது. இடையிடையே தனது ஊடுதுவும் பார்வையினை என்மீது செலுத்தினார். மீண்டும் நூலினைக் காணத் தொடங்கினார். நூலைப் பார்த்த பின்னர் அதனைத் தன் முழங்கால் மீது வைத்துக்கொண்டு தனது அணுக்கத் தொண்டருடன் தமிழில் பேசத் தொடங்கினார். அவர் பேசி முடித்தபின்னர் அந்தண ஊழியர் என்னிடம் வந்து, "பகவானின் விருப்பம் யாதெனில், இந்த பிரேசில் நூலுக்கு சங்கரரின் விவேக சூடாமணி, மற்றும் தாமஸ் கெம்பிஸ் எழுதியுள்ள *'Imitation of Christ'* நூலிலிருந்தும் அடிக் குறிப்புகளைச் சேர்க்குமாறு கூறியுள்ளார் என்றார். பின்னர் பகவானது சைகையினால், நான் அவர் அருகே சென்று அந்த நூலை அவர் கையிலிருந்து பெற்றுக் கொண்டேன்.

பகவானின் இந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நான் பலகாலும் ஆஸ்ரம நூலகத்தில் பணியாற்ற வேண்டி வந்தது. பகவானது இந்த விருப்பத்தை நிறைவேற்ற, ஓர் அமெரிக்க பக்தை முழு உதவி செய்தார். எனது கையெழுத்து போதுமான அளவு தெளிவாக இல்லை என்பதனால், இந்தக் குறிப்புக்கள் அனைத்தையும் பகவான் படிப்பதற்கு எளிதாக, நான் கொட்டை எழுத்துக்களில் எழுதவேண்டி வந்தது. இறுதியில் இந்தக் குறிப்புக்களை பகவானிடம் ஒப்படைக்க முடிந்தது.

நான் இதுகாறும் கூறி வந்துள்ள அனைத்து நிகழ்வுகளிலும் பகவான் கூர்மையான கவனத்துடன் ஈடுபட்டு இருந்தார் என்பது அவர் ஆச்ரமத்தில் இருந்த மேலைநாட்டு அன்பர்கட்கு, குறிப்பாக ஆச்ரமத்தில் நிரந்தரமாகத் தங்கியிருந்த ஒரு பக்தைக்கு, மிகவும் வேடிக்கையாக இருந்தது. வியப்பூட்டும் இந்தக் கவனத்திற்கு ஒரு காரணம் இருந்தது. எதையுமே

பகவான் லட்சியம் செய்ததில்லை. எது எப்படி எங்கே நடந்தாலும் அதை அவர் பொருட்படுத்தியதில்லை என்பதை இதுகாறும் கண்டுவந்த அவர்களுக்கு இப்போது பகவான் காட்டிய ஆழ்ந்த லட்சிய நோக்கு வியப்பைத் தந்திருக்கக் கூடும்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, பகவானது உபதேசங்களையும் மற்றும் அவரைப் போற்றுபவர்களின் படைப்புகளையும் முதன்மைப் பாடமாகக் கொண்டுள்ள, பாரிஸிலும், பிரேசிலிலும் உள்ள இரு குழுக்களைப் பற்றி எடுத்துரைத்தேன். பகவான் இந்தக் குழுக்கள் யாரால் துவங்கப் பெற்றன என்பது பற்றியும், அவர்கள் பயிற்சியின் குறிக்கோள் என்ன என்பது போன்ற பல வினாக்களைத் தொடுத்தார். புன்முறுவலுடன் அவர் வினாக்களைத் தொடுத்த விதம் உண்மையில் அற்புதமாக இருந்தது. அம்முறுவல் பகவானிடம் மேலும் உரையாடும் துணிவை எனக்கு அளித்தது. இத்துணிவு எனக்கு மிகவும் தேவையான ஒன்று. இத்துணிவின்றி மற்றையோருடன் பேசுவதுபோல் பகவானுடனும் உரையாட இயலுமா என்ன? "பகவானைத் தேவையற்று புகழுமாறு ஒரு வார்த்தை கூறக் கூடாது" என்று எனது உள்ளுணர்வு கூறியது. நான் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அதைக் கேட்டுக்கொண்டு இருப்பவர்தம் மஹத்துவத்துக்கு பொருந்த இருக்க வேண்டும். அந்தப் பெரும் சக்திக்கு முன், ஒவ்வொரு வார்த்தையை உச்சரிக்கும் முன்னரும், நமது தகுதியின்மை குறித்து பெரும் நாணத்துடனே துவங்குகிறோம். அவரது அழகிய கண்ணோக்கம் நம்மீது விழத் தொடங்கியவுடன் படிப்படியாக மறைகின்றது.

மகரிஷி நம்மிடம் பேசும்போது, அவரது திருக்கண்ணோக்கு வெளிப்படுத்தும் பெருங்கருணை, ஞானம், அனைவரையும், அனைத்தையும் புரிந்தறியும்

பேரறிவு - இவை அனைத்தையும் ஒருங்கே கொண்ட திருவிழிகள் வேறு எவருக்கேனும் உள்ளதா என்பது சந்தேகமே! அந்தத் திருவிழிகளின் ஞானக் கதிர்வீச்சு அவர் நம்மைப் பார்த்து நம்முடன் பேசும் தருணங்கள் அனைத்திலும் நம்மீது விழுகின்றது.

நான் சென்றடைந்த துவக்கச் சில வாரங்கள் வரை அவரை எங்ஙனம் விளிக்க வேண்டும் என்பதை நான் அறியேன். மற்றவர்கள் செய்வதைக் கண்டு, நானும் அதேபோல் சில வாக்கியங்களை எழுதி, காலைத் தியான வேளைக்குப் பின்னர் அவரிடம் சமர்ப்பித்தேன். அந்த வாக்யங்கள் எந்த ஒரு கோரிக்கையையும் விடுக்கவில்லை. அவை எந்த ஒரு கேள்வியையும் உள்ளடக்கவில்லை. நான் பின்னர் இந்தியாவை விட்டு நீங்குவதற்கு முதல் நாள், பகவானிடம் விடைபெறச் சென்றபோது என்ன கூறினேனோ அவற்றையே உள்ளடக்கியவை. அந்தச் சில வார்த்தைகள் 'நான் யார்' என்பதன் சுவைப் பிழிவாய் அமைந்தன. பகவான் காட்டும் ஆன்மிகப் பாதையில் பயணம் செய்யத் தேவை எதுவோ அதனையே அவை உள்ளடக்கின.

என்னுடைய இந்த ஒரே பிரார்த்தனையை அவர் பூர்த்தி செய்கிறார் என்பதைப் பின்னர் நான் முற்றிலுமாக உணர்ந்தேன். நான் வேறு எந்தக் கோரிக்கையையுமே சமர்ப்பிக்கவில்லை. பகவானின் இந்த அருட்கொடை எல்லா எல்லைகளையும் கடந்தது. என் வாழ்க்கையின் எல்லையையும் கடந்தது. இந்த அருட்பொழிவு, பிறப்பு-இறப்பு இரண்டையுமே கடந்த ஒரு மஹா சக்தியினால் மட்டுமே செய்யக்கூடிய ஒன்று என்னும் பேருண்மையை பகவானின் பிரசன்னத்தால் உணர்ந்த நான், இம்முறை தவறு ஏதும் இழைக்காமல் பரம்பொருளைச் சார்ந்துள்ளேன் என்பதை அறிந்தேன். அனைவரும் அறிந்தே, சில சமயங்களில், யோகியர் மற்றும் சித்தர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும்

மற்றும் ‘தம்மைத்தானே’ மாமனிதன் என்றும் அவர் காட்டும் அமானுஷ்ய சக்திகளை பகவான் மென்மையாகக் கேலி செய்வதுண்டு. மனிதர்கள் தம்முடைய மனம் சார்ந்த சக்திகளைக் கொண்டு அவர்கள் தமது சூழ்நிலை மீது தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆயின் மகரிஷி போன்று அவர் சந்நிதியில் நாம் அமர்ந்திருக்கும்போது, உள்ளார்ந்த ஆர்வத்தோடு சத்யத்தைத் தேடும் சாதகர் பிரக்ஞை உணர்விலே மற்றவர்களை நாம் என்னவென்று விவரிக்க முடியும்-

அல்லது நமக்கு உதவ யாருமே இல்லை என்று நாம் துயர்வுற்று கைவிரிக்கும்போது, எதிர்பாராத விதமாக வந்து உதவுவது எது? யார்? இதுகுறித்து யாருமே அதிகம் பேசுவதில்லை. எனவே இது குறித்து நாம் ஒன்றுமே அறிவதில்லை. அத்தகைய எதிர்பாராத உதவியை அனுபவித்த பெரும், சத்ய நாட்டத்தில் தம்முடன் மிக நெருங்கிச் செல்லும் ஸஹ்ருதயத்தைத் தவிர்த்து வேறு யாரிடமுமே இது குறித்து அனுபவித்தவர்கள் பேசுவதில்லை.

பகவானைச் சூழ்ந்து எந்த மர்மமும் நிலவுவதில்லை. அவர் மிகவும் எளிமையும், இயற்கையான நடத்தையும் கொண்டு உலவுவதால், அப்படி ஒரு அசாதாரணமான, நம்ப இயலாத நிகழ்வு இந்தக் கூடத்திலோ, அல்லது வாசக சாலையின் மூங்கில் கூரையின் கீழேயோ நிகழினும், அங்கே ஏற்றி வைக்கப்பட்ட ஊதுபத்தியின் அருள்புகை, மெதுவாக எழுந்து பகவானின் காலடியில் பணிந்து, பின்னர் உயர்ந்து மேற்கூரை நோக்கிச் செல்வதைப் போன்ற தினசரி காணும் சாதாரண நிகழ்ச்சியாகவே நோக்கப்படும்.

இங்கே உள்ள மாபெரும் அற்புதம் மகரிஷி மட்டுமே. இதுகுறித்து பெரும்பாலோர் உணர்வதோ, சிந்திப்பதோ கிடையாது என்பதை நான் அறிவேன். இத்தகைய

அற்புதங்கள் நாம் நம்முள் ஆழ்ந்த மௌனத்தில் மூழ்கி நமது ப்ரக்ஞையில் முக்குளிக்கும்போது மட்டும் அறிய முடியும். மகரிஷியின் புலன்தரும் தாக்கத்தை எல்லோரும் உணர்ந்தாலும், பிரசன்னத்தில் முற்றிலும் கரைதல் என்பது எல்லாராலும் இயலுவதில்லை.

* * *

இன்று காலை இந்து ஞானி ஒருவரின் திருநாள் கொண்டாடப் பட்டது. இதன் தொடர்பாக தெய்வீகப் பசுக்களின் சிலைகளை மலர்மாலைகளால் அலங்கரித்தும், குங்குமம் பூசியும் வழிபட்டனர். இந்தப் பசுக்களில் ஒன்றின் சிலை, மலையை வளைத்து அணைத்துச் செல்லும் சாலையின் வேலியருகில் ஆச்ரம மைதானத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இந்தப் பசுவிற்குரிய சிறிய ஆலயத்துள் முன்னர் பகவான் அமர்ந்து பூஜை முடியும் வரையிலும் அமர்ந்து இருந்தார். அவரைச் சூழ்ந்து பக்தர்கள் மந்திரங்களை ஒலித்துக்கொண்டு இருந்தனர். எப்போதும் போலவே இப்போதும் பகவான் அமைதியாகவும், மௌனமாகவும், தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளில் எந்த ஆர்வமும் காட்டாமலும் அமர்ந்து இருந்தார்.

சிறிது நேரத்திற்குப் பின், நான் பகவானின் வெளிப்பாடான இந்த அலட்சியத்தின் காரணம் என்ன என்பதைப் புரிந்து கொண்டு விட்டதாக நினைத்தேன். இது என்னவெனில், பகவான் வெளிப்படையான இந்த உலகம் பொய்ம்மையான ஒன்றே என்பதை அறிவார். இந்தப் படைப்பு முழுவதையும் அணைத்திருக்கும் மெய்ம்மையில் திளைத்திருக்கும் அவருக்கு, தற்காலிகமான புகை போன்ற துணுக்கு நிகழ்வுகளில் என்ன ஆர்வம் இருக்கப் போகிறது!

காலம் மற்றும் இடம் பற்றிய எந்தத் தர்க்கமான ஆய்வுகளும் பகவானின் இந்தக் கோட்பாட்டை ஐயமின்றி நிறுவ முற்படவேண்டும். அதேசமயம் நான் ஒரு எண்ணம் சார்ந்த தத்துவதிற்கும், ஸத்யத்தை முற்றிலும் அறிவதற்குமான வேறுபாட்டையும் கண்டிருந்தேன். ஒரு தத்துவக் கொள்கை மீது ஆழ்ந்த பிடிப்பு இருப்பது நல்லதுதான். அது தவறுகளில் இருந்து நம்மைக் காக்கிறது. ஒப்புநோக்கும்போது, நம்மிலிருந்து மிகத் தொலைவில் உள்ள ஒரு நட்சத்திரமும், நம் காலடியில் உள்ள சிறு எறும்பும், நம்முடைய பிரக்ஞை உணர்விலிருந்து சமமான தூரத்திலேயோ, அல்லது சமமான அருகாமையிலோ அமைந்துள்து என்பதை உணர்வது எளிதாகிறது. அதேசமயம், நம் உள்ளே நாம் சமைத்துள்ள அனைத்தையும் அரவணைக்கும் உலகிலேயே வாழ்வது என்பது அவ்வளவு எளிதல்ல.

நான் இப்போது இந்தச் சூழ்நிலையில், பூரண ப்ரக்ஞை நிலையிலேயே எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரின் திருவடிக்கீழ் வாழும் சந்தர்ப்பம் கிடைத்திரா விட்டால் இத்தகைய ஓர் உயர் எண்ணம் கொண்டு எனக்கு வந்திராது. பகவானின் திருவடிக்கீழ் வந்தபின்னர், வெறும் நம்பிக்கையாய் ஆரம்பித்த ஒன்று பரம சத்தியமாய் முகிழ்த்து உள்ளது. ஏனெனில், இந்தப் பரம ப்ரக்ஞை உணர்விலேயே சதா நிலைத்திருக்கும் ஒருவர் நம் எதிரிலேயே வாழ்ந்திருந்து, தன் ஞானப் பேரொளியை அகிலம் முழுதும் பரப்புகின்றார் என்பதைக் காண்கிறேன்.

இந்த விழாவின் இரண்டாம் பகுதி ஆலயத்திற்குள் நடைபெற்றது. விபூதியும், குங்குமமும் கொண்ட தட்டுக்கள் கொணரப்பட்டு, அனைவரும் அவரவர் நெற்றியில் பூசிக் கொண்டோம். சனாதன தர்மத்தின் புராதனக் குறியீடாக உள்ள இந்த விபூதி-குங்குமத்தின் ஆன்மிகப் பொருளை தற்போது சிலர் மட்டுமே அறிந்துள்ளனர்.

# ஸ்ரீ ரமணாஸ்ரமம் (இசைப்பாடல்)

**ரமண ராஜசேகர்**

*அருள்வழங்கும் அருணைமலை ரமணாஸ்ரமம்!*
*ஆனந்தம் தருகின்ற ரமணாஸ்ரமம்!*
*குருவருள் பொழிகின்ற ரமணாஸ்ரமம்!*
*கோவிந்த பகவானின் ரமணாஸ்ரமம்! (அருள்)*


*குறையெல்லாம் தீர்க்கின்ற ரமணாஸ்ரமம்!*
*கோசாலை நிறைந்துள்ள ரமணாஸ்ரமம்!*
*மறைஒளியை ஓதுகின்ற ரமணாஸ்ரமம்!*
*மயில்ஓடி ஆடுகின்ற ரமணாஸ்ரமம்! (அருள்)*

*துன்பங்களை விரட்டுகின்ற ரமணாஸ்ரமம்!*
*தூயஉள்ளம் தருகின்ற ரமணாஸ்ரமம்!*
*என்னுள்ளே ஒளிகாட்டும் ரமணாஸ்ரமம்!*
*எல்லோரும் விரும்புகின்ற ரமணாஸ்ரமம்! (அருள்)*

*இன்பமான சூழல்தரும் ரமணாஸ்ரமம்!*
*இதயத்தினைத் தெளிவாக்கும் ரமணாஸ்ரமம்!*
*அன்னைபோல ஆதரிக்கும் ரமணாஸ்ரமம்!*
*அன்னம்தந்து பசியைப்போக்கும் ரமணாஸ்ரமம்!(அருள்)*

*சிவகுருவாய் ரமணர்வாழ்ந்த ரமணாஸ்ரமம்!*
*சிந்தனையைத் தெளிவாக்கும் ரமணாஸ்ரமம்!*
*தவம்பழக ஏற்றஇடம் ரமணாஸ்ரமம்!*
*தன்னையறிய வழிகாட்டும் ரமணாஸ்ரமம்! (அருள்)*

*அழகம்மை புகழ்பாடும் ரமணாஸ்ரமம்!*
*ஆத்மகோயில் பெற்றஇடம் ரமணாஸ்ரமம்!*
*உலகம்போற்றும் பகவானின் ரமணாஸ்ரமம்!*
*ஒப்பில்லாத ஞானகுருவின் ரமணாஸ்ரமம்!*



# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### அயோத்தி இராமர் கோயில் பிராண பிரதிஷ்டை பூஜை

### (22-1-2024)

*பாரம்பரிய நாகரா பாணியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இராமர் ஆலயத்தின் பிராண பிரதிஷ்டை அயோத்தியில் 22/1/2024 வெகு விமரிசையாக நடைபெற்றது. பெருமையும் மகிழ்ச்சியும் நிரம்பிய மங்களகரமான இந்நன்னாளினைக் கொண்டாடும் விதமாக ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் தாயார் சந்நிதியில் ராம் லல்லா படத்திற்குச் சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன. வால்மீகி ராமாயணத்தின் ராம் மஹிமா பாராயணம் செய்யப்பட்டு அதன் முக்கியத்துவம் விளக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து ஆரத்தி, ராமர் துதிப் பாடல்கள் பாடப்பட்டன.*

### சின்ன ஸ்வாமிகள் ஆராதனை

### (25-1-2024)

*சுந்தரம் ஐயர் அழகம்மாள் தம்பதியினருக்கு மூன்றாவது மகனாக (பகவானுக்கு அடுத்ததாக) 1887-இல் பிறந்தவர் நாகசுந்தரம். 1918-இல் சந்நியாசம் பெற்று சுவாமி நிரஞ்சனானந்தர் ஆனார். சின்ன சுவாமிகள் என்று அன்பர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட இவர், 1931-இல் ரமணாச்ரம காரியதரிசியாகவும் பின்னர் சர்வாதிகாரியாகவும் பொறுப்பேற்றார். பகவானது ஆசி அவருக்குப் பரிபூரணமாக இருந்தது. ஆச்ரம வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்ட சிறந்த கர்மயோகி சின்ன சுவாமிகள்.*

*சின்ன சுவாமிகளின் ஆராதனை 25/1/2024 அன்று ஆச்ரமத்தில் அமைந்துள்ள அவரது சமாதியில் அனுசரிக்கப் பட்டது. அவரது சமாதிக்கு சிறப்பு அபிஷேக, அலங்காரங்கள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன.*

## சுந்தரம் ஐயர் ஆராதனை
## (29-2-2024)

*சுந்தரார்ய தப: பலாய நம:*

*சுந்தரம் ஐயருக்குப் பகவான் மகனாகப் பிறந்தது, சுந்தரம் ஐயரின் ஆழ்ந்த தவத்தின் பயனே என்று விஸ்வநாத ஸ்வாமிகள் பகவான்மீது இயற்றிய ரமண அஷ்டோத்திரத்தில் (108 நாமங்கள்) குறிப்பிடுகிறார்.*

*பகவான் ரமண மகரிஷிகளின் தந்தையார், சுந்தரம் ஐயரின் ஆராதனை தினம் ஸ்ரீரமணாச்ரமத்தில் 29/02/2024 அன்று அனுசரிக்கப்பட்டது.*

## மகா சிவராத்திரி
## (8-3-2024)

ஆதிஅரு ணாசலப்பேர் அற்புதலிங் கத்துருக்கொள்
ஆதிநாள் மார்கழியில் ஆதிரையச் – சோதியெழும்
ஈசனைமால் முன்அமரர் ஏத்திவழி பட்டநாள்
மாசிசிவ ராத்திரியா மற்று.

*பொருள்: முதல் லிங்கமாகிய அருணாசலம் என்ற பெரிய அற்புதமான சிவலிங்கத்தின் உருவத்தை ஈசன் மேற்கொண்ட புராதன நாள் மார்கழி மாதத்தின் திருவாதிரை நாளாகும். அந்த அருணாசல ஜோதி ஸ்தம்பத்திலிருந்து மூர்த்தி ரூபமாக வெளிப்பட்ட சிவபிரானைத் திருமால் முதலான தேவர்கள் அனைவரும் போற்றி வழிபட்ட நாள் மாசி மாதத்து (கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி தினமான) மகா சிவராத்திரி தினமாகும்.*

*இப்புனிதமான மகா சிவராத்திரி வழிபாடு ஆச்ரமத்தில் 8/3/2024 அன்று இரவு நான்கு கால அபிஷேகங்கள் மற்றும் பூஜைகளுடன் சிறப்பாக நடைபெற்றது.*

*"சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை" என்று ஔவையார் அருளியுள்ளதைப் போன்று 'நம சிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்து சிவராத்திரியை அனுசரித்தவர்க்கு ஈசனின் அருள் பரிபூரணமாகக் கிடைத்திருக்கும்.*

*இந்த மந்திரம் நரக, மரண, பால்ய, வயோதிக, யம பயங்களை நீக்க வல்லதாகும். தெய்வாதீனமாக சிவராத்திரி என்று அறியாமலேயே புலிக்குப் பயந்து வில்வ மரத்தில் ஏறி அன்ன ஆகாரமின்றி அதன் வில்வ தளங்களைப் பறித்து மரத்தடியில் இருந்த்த சிவலிங்கத்தின்மீது அறியாமலே எறிந்த வேடன் ஒருவன் சிவனருளுக்குப் பாத்திரமாகி முக்திப்பேறு பெற்ற வரலாற்றை நாம் அறிவோம்.*

*'மந்திரமாவது நீறு' என்கிறார் ஞானசம்பந்தர். சிவராத்திரி அன்று விபூதி தயாரிப்பு தொடக்கப் பூஜையும் வழக்கம்போல் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் நடைபெற்றது.*

## ஸ்ரீ வித்யா ஹோமம்

*ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ஸ்ரீ வித்யா ஹோமம் வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு 15/3/2024 அன்று இந்த ஹோமம் வெகு சிறப்பாக நடந்தேறியது.*

*காலை 7 மணிக்குத் துவங்கி மாலை 3 மணி வரை பூஜைகள் நடந்தன. அதில் நவாவர்ண பூஜை, ஹோமம், சுமங்கலி பூஜை, கன்யா பூஜை, பூர்ணாஹூதி மற்றும் தீபாராதனை நடைபெற்ற பின்னர் கலசங்களில் தீர்த்தங்கள் கொண்டு செல்லப்பட்டு பகவான் மற்றும் தாயார் ஆலயங்களில் அபிஷேகங்கள் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றன.*

*எல்லோருடைய இதயக் கமலங்களிலும் வாசம் பண்ணுகிற பர தேவதையினுடைய மேலான கிருபை வேண்டி, அவள் ஆராதிக்கப்பட்டால் பூரண சந்தோஷமடைந்து பக்தருடைய இருதயாகாசத்தில் விசார சூரியனாக உதயம் செய்கிறாள். ஆகையினால் ஆத்ம சொரூபிணியானவளும், சர்வ இருதய வாசனியும் சித்ரூபியும், சிவையும், பரமேசுவரியுமான*

*திரிபுரையை சத்குரு மார்க்கமாக உள்ளத்தில் கபடமின்றி ஆராதனை செய்ய வேண்டும் என்று திரிபுரா ரகசியத்தில் சொல்லப்பட்டுள்ளது.*

*ஸ்ரீ என்பது லக்ஷ்மிக்குரிய அக்ஷரம். வித்யா என்றால் கலை. இந்த பூஜையைக் கண்ணுற்றால் வாழ்விற்குத் தேவையான செல்வம், வித்தை போன்றவைகளைப் பெறலாம் என்பது ஐதீகம். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அன்னை திரிபுர சுந்தரியின் அருளைப் பெற்றனர்.*

*மாத்ருபூதேச்வர ஆலயத்தில் ஸ்ரீசக்ர மேரு பிரதிஷ்டையின்போது பகவான் தமது திருக்கரத்தால் ஸ்ரீசக்ர மேருவைத் தொட்டு ஆசிர்வதித்தார். கும்பாபிஷேத்திற்குப் பிறகு விஸ்தாரமாக நடந்த ஸ்ரீ சக்ர பூஜையில் பகவான் கலந்து கொண்டார். திரிபுர ரகசியம் போன்ற நூல்களில் ஸ்ரீ வித்யா வழிபாட்டின் முறைகளும் தாத்பரியமும் குறிப்பிடப் பட்டுள்ளதை பகவான் சிலாகித்துக் கூறியுள்ளார்.*

அனைத்து நிகழ்ச்சிகளின் காணொளிகளையும் ஆச்ரம *YouTube Channel* வாயிலாகக் காணலாம்.

## அருணாசல அக்ஷரமணமாலை ஒப்புவித்தல்

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் அருளிய 'அருணாசல அக்ஷரமணமாலை' ஒப்புவித்தல் போட்டி திருவண்ணாமலை மற்றும் சுற்றுவட்டார பள்ளிக் குழந்தைகளிடையே நடத்தப்பெற்று, சிறப்பாக ஒப்புவித்த குழந்தைகளைப் பாராட்டி நற்சான்றிதழ் மற்றும் கேடய நினைவுப் பரிசு வழங்கும் விழா 7/4/2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 3.30 மணி அளவில் ஆச்ரம புதிய பாகசாலையில் நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சியில், போட்டியில் பங்குபெற்ற பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் திரளாகக் கலந்து கொண்டனர்.*

*ஸ்ரீ ரமணாஸ்ரம தலைவர் டாக்டர் வேங்கட். S. ரமணன் அவர்கள், தலைவர் அவர்களின் தாயார் திருமதி. சுசீலா ரமணன் அவர்கள், ஆச்ரம டிரஸ்டி திரு. சிவதாஸ்*

*கிருஷ்ணன் அவர்கள் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் தலைமையாசிரியை திருமதி. சுலோசனா நடராஜன் அவர்கள் முன்னிலையில் இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.*

*விழாவில் திருமதி. சுலோசனா நடராஜன் அவர்கள் துவக்கவுரையும், திரு. சிவதாஸ் கிருஷ்ணன் அவர்கள் நன்றியுரையும் ஆற்றினர். சிறார்கள் அருணாசல அக்ஷரமணமாலையை ஒருமித்த குரலில் இணைந்து பாடியது செவிக்கு இனிய உணவாக அமைந்தபோதிலும், கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கும், பள்ளிச் சிறார்களுக்கும் இனிப்புகளும், தின்பண்டங்களும் ஆச்ரம சார்பில் வழங்கப் பட்டன.*

# ஸ்ரீ ரமணாச்ரம நூற்றாண்டு சிறப்பு விழா கொண்டாட்டங்கள்

## சிறப்பு சத்சங்கம் - ஐதராபாத்

## (25-02-2024)

*காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை ஐதராபாத் ரமண கேந்திரத்தில் ஸ்ரீரமணாச்ரம நூற்றாண்டு விழா சிறப்பு சத்சங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஸ்ரீரமணாச்ரமத் தலைவர் வேங்கட் S. ரமணன் அவர்கள் சிறப்புரையாற்றினார். மேலும் ஆச்ரம டிரஸ்டி திரு. சிவதாஸ் கிருஷ்ணன் அவர்கள், 'மௌண்டன் பாத்' ஆசிரியர் குழு உறுப்பினர் Dr. ராம் மோஹன் அவர்கள், ஐதராபாத் சத்சங்கத்தை வழிநடத்தும் திரு. V. கீர்த்திவாசன் அவர்கள் ஆகியோர் உரை நிகழ்த்தினர். ரமணாச்ரம அன்பர்கள் மற்றும் ரமண கேந்திர ரமண பக்தர்கள் பக்திப் பாடல்கள் மற்றும் பஜனைப் பாடல்களைப் பாடினர்.*

## சிறப்பு சத்சங்கம் - மும்பை

## (23-03-2024)

*ஸ்ரீ ரமணாச்ரமத்தின் நூற்றாண்டு விழா வைபவத்தின் ஓர் அங்கமாக 23 மார்ச், 2024 சனிக்கிழமையன்று காலை 9.30 மணி முதல் நண்பகல் 1.00 மணிவரை, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், [12-ஆவது சாலை, சுவாமி விவேகானந்தா சௌக்,*

*கர் (மேற்கு)] மும்பையில் ஸ்ரீ ரமணாச்ரம நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*நிகழ்ச்சியில் 'உபதேச சாரம்' பாராயணத்திற்குப் பின்னர் ஸ்ரீ ரமணாச்ரமத் தலைவர், டாக்டர் வேங்கட் S. ரமணன், அவர்கள் துவக்கவுரை ஆற்றினார். சுவாமி சிதானந்தா அவர்கள் (Founder Head, FOWAI FORUM) சிறப்புரையாற்றினார்.*

*பண்டிட் பிரிஜ் நாராயணன் (சரோடு இசை), ஸ்ரீ ஹர்ஷ நாராயணன் (சாரங்கி இசை) ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*திரு. சிவதாஸ் கிருஷ்ணன், ஸ்ரீ ரமணாச்ரம அறங்காவலர் அவர்கள் முடிவுரை நிகழ்த்தினார்.*

*திரளான ரமண அன்பர்கள் கலந்து கொண்டனர்.*

# ரமண கேந்திர செய்திகள்

## ஸ்ரீரமண கேந்திரம், மைலாப்பூர், சென்னை
## ஸ்ரீ ரமண ஆராதனைப் பெருவிழா, 6-5-2024

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 74-ஆவது ஆராதனை சிறப்பு நிகழ்ச்சிகள்:*

**காலை:**

*06:00 மங்கல இசை*

*07:00 மஹன்யாசம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம்*

*10:00 ஸ்ரீ ரமண ஸஹஸ்ரநாம அர்ச்சனை*

*11:00 உள்ளது நாற்பது, அருணாசல அக்ஷர மணமாலை பாராயணம்*

*12:00 தீபாராதனை*

*அனைவருக்கும் அன்னப் பிரசாதம் அளிக்கப்படும்*

**மாலை:**

*04:00 பிரதோஷ பூஜை*

*06:45 ஸ்ரீ ரமணரின் திருவுருவம் தாங்கி மயிலை நான்மாட வீதிகளில் உலா*

*07:15 அருணாசல அக்ஷர மணமாலை கூட்டுப் பாராயணம்*

*அனைவரும் கலந்துகொண்டு இறையருள் பெற அழைக்கிறோம்.*

*நன்கொடைகள் 80G IT சட்டப்படி விலக்குப் பெறும். காசோலை/Draft 'Ramana Kendra Trust' என்ற பெயரில் கொடுக்கவும்.*

## ரமணாலயம் (ஸ்ரீ ரமணாச்ரம நிர்வாகம்), குரோம்பேட்டை, சென்னை ஸ்ரீ ரமண ஆராதனைப் பெருவிழா, 6-5-2024

**காலை:**

*07:30 நாத இசை*

*08:00 வேத முழக்கம், நூற்றியெட்டு ஸ்ரீ ரமண நாம பூஜை*

*09:30 ஸ்ரீ ரமண சந்நிதி முறை - பக்க வாத்தியங்களுடன் பண்ணிசை வழங்குபவர் 'திருவாசக செந்நாவலர்' மயிலை சத்தகுருநாத ஓதுவார் சுவாமிகள்*

*11:00 அருணாசல அக்ஷரமணமாலை கூட்டுப் பாராயணம்*

*11:30 தீபாராதனை, கலந்து கொள்ளும் அன்பர்களுக்கு சிறப்பு உணவுப் பிரசாதம்*

## ஸ்ரீமுருகனார் மந்திரம், இராமநாதபுரம் ஸ்ரீ ரமண ஆராதனைப் பெருவிழா, 6-5-2024

*ஸ்ரீரமணாச்ரமத்திற்குப் பாத்தியமான முருகனார் மந்திரத்தில் வழக்கம்போல் இவ்வாண்டும் பகவான் ரமணரின் 74-ஆவது ஆராதனை விழா சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. பகவான் அருளிய அக்ஷரமணமாலை கூட்டுப் பாராயணம் நடைபெறும். அன்பர்களுக்கு அன்னதானப் பிரசாதம் வழங்கப்படும்.*

# இனிவரும் திருநாட்கள்

## 2024

| | | | |
|---|---|---|---|
| மே | 06 | திங்கள் | பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 74-ஆவது ஆராதனை |
| | 31 | வெள்ளி | மகாபூஜை |
| ஜூன் | 18 | செவ்வாய் | பசு லட்சுமி ஆராதனை |
| ஜூலை | 21 | ஞாயிறு | குரு பூர்ணிமா |
| செப்டம்பர் | 01 | ஞாயிறு | ஸ்ரீபகவான் அருணையடைந்த தினம் |
| அக்டோபர் | 03 | வியாழன் | நவராத்திரி விழா தொடக்கம் |
| | 12 | சனி | சரஸ்வதி பூஜை & விஜயதசமி |
| | 31 | வியாழன் | தீபாவளித் திருநாள் |
| டிசம்பர் | 04 | புதன் | கார்த்திகை தீபத் திருவிழா தொடக்கம் |
| | 13 | வெள்ளி | கார்த்திகை தீபப் பெருநாள் |
| | 17 | செவ்வாய் | ஸ்ரீபகவானது 145ஆவது ஜயந்தி |

Ramanodhayam — Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.




ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் நூற்றாண்டு விழா வைபவத்தின் ஒரு அங்கமாக 23 மார்ச் 2024 அன்று மும்பையில் ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



15/3/2024 அன்று ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் நடைபெற்ற
ஸ்ரீ வித்யா ஹோமத்தின் புகைப்படத் தொகுப்பு

Registered with the Registrar of Newspaper for India RNI No.TNTAM/2001/5542

